# முரசொலி

வார இதழ் — ஆசிரியர் மு. கருணாநிதி

முரசு 3 | 28–12–56 | வெள்ளி | ஒலி 39






உரிமை
செந்தமிழ் பதிப்பகம்.


...ண்புத் மேருவை ஒரு சுறு சுறுப்புள்ள சமையலறைப் பெண்—என்று வாணித்தது ஒரு அமெரிக்க ஏடு. அந்த 'சமையலறைப் பெண்'ணின் சுறுசுறுப்பைத்தான் நமது சித்திரக்காரர் இப்படி விளக்குகிறார்!


Best copy available

# நாடகத்தில் புதிய கட்டம்; நாடாள்வோரின் ‘சதித் திட்டம்’!

அன்னமே; சொர்ணமே! பொற்கொடியே; நற்கனியே! எங்கே என்னைப் பார்! ஒரு கடைக் கண் வீச்சு; அதற்கு என் ‘கஜானா’வையே உன் காலடியில் வைக்கிறேன்.

‘இச்’ சென்று ஒரு முத்தம்; என் இன்பமே! என் இதயத்தை அடகு வைக்கிறேன்! எங்கே; மின்சாரக் கம்பியானும் சக்தி பெற்ற உன் காந்தள் விரல்களால் ஒரு முறை என்னைத் தொடு தொட்ட விரலுக்கெல்லாம் பட்டை வைர மோதிரம் பரிசாகத் தருகிறேன்.

ஒரே ஒரு புன்சிரிப்பு; புவியில் உள்ளதெல்லாம் உனதுடைமையாக்குகிறேன்!

நாதா — என்று அன்பு கனிய ஒரு வார்த்தை; என் நஞ்சை புஞ்சை யெல்லாம் உன் பெயருக்கு எழுதி வைக்கிறேன்!

ஏன் தாமதம்? காலம் ஓடுகிறது, கண்ணாட்டி! என் கவலையைப் போக்கு—காசா பெரிது?

—இப்படி வர்ணனைகளை அள்ளிக் கொட்டினான்; வார்த்தைகளைக் காசு கொடுத்தா வாங்க வேண்டும்? எனவே வாரி இறைத்தான் — நங்கை நல்லாளை ஒரு முறை வாரியணைத்துத் தழுவி, ஊடி; கூடி; இன்பம் பெற!

பள்ளியறையாயிற்றே!

நள்ளிரவு விடை பெற்று பகலவன் தலை தூக்கும் நேரமல்லவா?

எனவே விடிவதற்குள் அவன் அவளை மயக்குவதற்குத் தான் கற்ற கவிதையனைத்தையும் ஒப்புவித்தான் — ஒய்யாரி; சிங்காரி—என்று என்ன வெல்லாமோ சொன்னான்!

அவ்வளவு ஏன் கட்டிலறை இன்பம் எய்த; மான அவமானத்தை மறந்து அவள் காலில் விழவும் தயாரானான்!

—இதிலென்ன புதுமையிருக்கிறது! உலகம் தோன்றிய நாள்முதல் ஒரு கண இன்பத்திற்காக ஆண்மகன் ஊசலாடும் உள்ளம் படைத்த பெண்ணினத்தின் முன்னால் மயக்கு மொழிகளையும். அந்த அனுப் பொழுது மட்டும் உயிரோடிருந்து பின் அழுலாகாத வார்த்தைகளையும் உபயோகித்துக் காரியம் சாதித்துக் கொள்ளப் பார்ப்பதில் ஆச்சரியமொன்றுமில்லையே! அப்படிச் செய்யாமல் ஆஸ்ரம முனிவர் போல் ஆமை வேஷம் போடுகிறான் ஒரு ஆண் பிள்ளை, என்றாலாவது அதிலே புதுமையிருக்கலாம்! இதில் என்ன இருக்கிறது?

—இப்படித்தான் சொல்லத் தோன்றும். முன் குறிப்பிட்ட சம்பவத்தைக் குறிப்பிடும் போது?

ஆமாம்; அப்படித்தான் இருக்கிறது தேர்தல் நெருங்க நெருங்க ஆட்சி பீடத்தை ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் தேசியத் தோழர்கள் பொது மக்களை மயக்குகிற விதத்தினை நோக்கும்போது!

மானே; தேனே; ஊனே; உயிரே—என்கிறான் ஒரு ஆண் மகன் அன்ன நடைக்காரியிடத்தில்!

அது தருகிறேன்; இது தருகிறேன்—என்று தன்னால் முடியாதவற்றுக்கும் சேர்த்து வாக்குத் தருகிறான்!

சேல் விழியாளுக்காகக் காலில் விழவும். கோல் கண்ட குரங்கு போலக் கூத்தாடவும் சித்தமாயிருக்கிறான். அந்தச் சிற்றிடையாளின் சித்தத்தைக் கவருவதற்கு!

அதே போன்ற நிலையில்தான் தேசிய வீரர்களும் இன்று இருக்கின்றனர்!

அங்கே மங்கை; இங்கே பொது மக்கள்!

அங்கே சிற்றின்பம்; இங்கே ஓட்டு!

அங்கே பொழுது விடியப் போகிறது; உதய சூரியன் உதிக்கப் போகிறான்—அதனால் அவசரப்படுகிறான்!

இங்கே பதவிக்காலம் முடியப் போகிறது; தேர்தல் நெருங்குகிறது; உதய சூரியன் சின்னம் உதயமாகி இருக்கிறது—அதனால்தான் அவசரப்படுகிறார்கள்; ஆசை வார்த்தை காட்டுகிறார்கள்; முடியாதனவற்றையும் செய்து முடிப்போம் என்று சூளுரைக்கிறார்கள்!

புத்திசாலியான பெண் எது நடைபெறும்; எது நடக்காது என்பதையும்-தனக்குமுன்னால் பல்லிளித்து நிற்பவன் பசுவா அல்லது பசுத்தோல் போர்த்திய புலியா; போகிபா அல்லது போலி வேஷதாரியா— என்பதையும் புரிந்து கொண்டு விடுவாள்!

அதே நிலையில்தான் இன்று பொது மக்களும் இருக்கிறார்கள்.

இவ்வளவு சொல்கிறீர்களே; இத்தனை ஆண்டுகளாக எவ்வளவு சாதித்திருக்கிறீர்கள்? —என்று அதட்டிக் கேட்கிற அளவுக்குத் தைரியம் பெற்று விட்டார்கள்!

இது தெரிந்த பிறகுதான் தேசிய வீரர்கள் நடிக்கின்ற நாடகத்திலும் புதிய வேகம் தோன்றியிருக்கிறது. வேஷப் பொருத்தம் பார்த்து நடிக்கத் துவங்கி யிருக்கின்றனர்! அந்தப் போலி நாடகத்திலே புதுப் புதுக் காட்சிகளையும் சேர்த்திருக்கின்றனர்!

அந்த ‘ஓட்டு வேட்டை’ என்னும் நாடகத்திலே முதற் காட்சிதான் சென்ற வாரம் சட்டசபையிலே நிறைவேற்றப் பட்ட ‘வரியில்லாத தீர்மானம்!’

ஏழைப் பொது மக்கள்மீது வரி விதித்தால் நாளை ஓட்டுக் கேட்க வரும்போது எங்கே அவர்கள் தங்கள் முதுகிலே வரி போட்டு விடுவார்களோ— என்று பயந்துகொண்டு; புதிய வரிகளைத் தேர்தல் முடிவுவரை அறிவிக்காமல் மிகவும் தந்திரமான முறையிலே நாடகத்தின் முதற் காட்சியை அரங்கேற்றி விட்டார்கள்!

இப்போது நாடகத்தின் இரண்டாவது காட்சி ஆரம்பமாகி யிருக்கிறது!

காமராசர்கள் மத்தளம் கொட்ட; பக்தவத்சலங்கள் பாசுரம் பாட; சுப்ரமணியங்கள் ‘தை, தை’ என்று குதிக்கின்றன!

ஆமாம்; சென்ற வாரம் திடீரென்று அறிவித்தார் சுப்ரமணியம் தமிழ் ஆட்சி மொழியாகப் போகிறது என்று!

அதைத் தொடர்ந்து தமிழை ஆட்சி மொழியாக்கும் மசோதாவும் பிரசுரமாகி இருக்கிறது!

இன்று; நேற்று? தமிழை ஆட்சி மொழியாகப் பிரகடனப் படுத்துங்கள்—என்று தமிழுணர்ச்சியும் தன்மான உணர்ச்சியும் கொண்ட தமிழர்கள் அனைவரும் ஆண்டுகள் பலவாக ஆட்சியாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்த வண்ணமேயிருந்தனர்!

திண்ணையில் அமர்ந்துபேசும் போதும்; தெருமூலைக் கூட்டத்தில் கதறும்போதும்; ஏட்டிலும் மாநாட்டிலுமாக லட்சோப லட்சம் தடவைகள் இந்தத் தமிழக மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தமிழை ஆட்சி மொழியாக்கு என்று அறைகூவல் விடுத்தனர்!

அப்போதெல்லாம் ஆணவத்தோடு அமைதிக் கோலம் கொண்டிருந்த ஆட்சி பீடம் இன்று தேர்தல் நெருங்குவதை கண்டு ஆட்டம் கொடுத்திருக்கிறது!

தமிழ் மொழியிலே கலைச் சொற்கள் ஏது? — என்று கர்ஜனை புரிந்து தமிழுணர்வுதனைக் காறி உமிழ்ந்த கனம்கள்

✻ 10-ம் பக்கம் பார்க்க


விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன
கற்கண்டு நிகர் ஏடுகள்!
★
மு. க. தீட்டிய
வெள்ளிக்கிழமை
நெஞ்சையள்ளும் நிகழ்ச்சிகள் கொண்ட உணர்ச்சிக் காவியம்!
விலை ரூ. 2--0--0
★
மாறன், எம். ஏ., எழுதிய
வால் நட்சத்திரம்
கருத்துக்கு விருந்தும்; எழுச்சிக்கு வித்தும் — ஆகக் கூடிய
எழில்மிகு சிறு கதைகள்!
விலை ரூ. 1—0—0
★
உங்கள் வீட்டு நூல் நிலையத்தில் இடம்பெற வேண்டிய
இன்பக் காவியங்கள்!
—விபரங்களுக்கு—
திராவிடப் பண்ணை
தெப்பக்குளம் : : திருச்சி-2

சென்னை 28--12--56 வெள்ளி

# மொரார்ஜியின் 'முழக்கம்!'

சென்னை மாநிலக் காங்கிரஸ்கட்சியினர் வடநாட்டு மொரார்ஜி தேசாய் ஒருவரை வரவழைத்து தேர்தல் பிரச்சாரத்திற்குத் துவக்க விழா நடத்தியிருக்கிறார்கள்.

இதுநாள் வரை திட்டங்களுக்கு நிதி பெற டில்லியை எதிர் பார்த்துக் கிடந்தார்கள்.

'நம் கஷ்டங்கள் தீர நாங்கள் வணங்கித் தீரவேண்டிய இஷ்ட தெய்வம் வாழும் திசை அதுவேதான்' என்று தொழுது வணங்கிக் கொண்டிருந்தார்கள்!

பாவம்; இப்போது கேவலம் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்து வைப்பதற்குக்கூட தென்னகத்தில் சரியான ஆள் கிடைக்காமல் வடநாட்டிலிருந்து ஒரு தேசாயைப் பிடித்து வந்திருக்கிறார்கள்!

பூந்தமல்லிப் பொதுக்கூட்டத்திலேயே அவர் வர இருக்கும் பொதுத் தேர்தலில் மக்கள் ஏன் காங்கிரசிற்கு ஓட்டுப் போடவேண்டும் என்பதற்கான காரணங்களை விளக்கியிருக்கிறார்.

மேலும் அவர் ஜனநாயக ஆட்சியில் தேர்தல் முறையைப்பற்றியும் விளக்கிப் பேசினாராம்!

ஜனநாயகம் என்னும் பதத்தையே உச்சரிக்கத் தகுதியற்றவர் அவர்! மக்களாட்சி முறைக்கு மரண தண்டனை விதித்த பண்பு மிக்கவர் அவர்!

ஆமாம்; சென்ற பொதுத் தேர்தலிலே அவர் எதிர்க் கட்சி அபேட்சகரிடம் தோற்றுப் போனார்!

இன்று வாய்கிழிய ஜனநாயகம் பேசும் மொரார்ஜி அன்று என்ன செய்தார்?

"மக்கள் குரலே மகேசன் குரல்; பொதுமக்கள் என்னை விரும்பவில்லை. எனவே இந்த ஐந்தாண்டுகளுக்கு நான் சட்ட சபையைத் தீண்டத் தகாதவனாகி விட்டேன்"-என்று கூறி ஒதுங்கிக்கொண்டாரா?

இல்லை.

கொல்லைப்புறமாகப் படையெடுப்பு நடத்தினார், ஜனநாயக நங்கை குடியேறியிருக்கும் சட்ட சபைக்கு.

அவ்வளவுதானா? குடியாட்சி முறையைக் கேலி செய்வதுபோல; 'முட்டாள் தொகுதி மக்களே; நீங்கள் என்னைத் தேர்ந்தெடுக்காவிட்டால் எனக்கு ஒன்றும் குடி முழுகிவிடாது' என்று எல்லோரையும் ஏகடியம் செய்யும் விதத்திலே அவர் பம்பாய் மாநிலத்தின் முதன் மந்திரியாகவும் ஆனார்!

—சட்டசபை நுழைய தேர்தல் முறை தேவையில்லை என்பது போல் பதவியில் அமர்ந்திருந்த மொரார்ஜிதான் சென்ற வாரம் சென்னையிலே ஜனநாயகத்தின் பெருமை பற்றிப் பேசியிருக்கிறார்!

சென்ற ஆண்டுத் தேர்தலிலே படுதோல்வி அடைந்தவர் இப்போது சென்னைத் தேர்தல் பிரசாரத்தைத் துவக்கம் செய்திருக்கிறார்! பாவம்; இங்குள்ள அமைச்சர்களின் வருங் காலத்தைக் காட்டுவதைப் போலத் தானோ என்னவோ இந்தமுறை தேர்தலில் தோற்று கொல்லைப்பக்கமாக கொலு மண்டபம் புகுந்தவர் வரவழைக்கப்பட்டிருக்கிறார், அவர் பேசியிருக்கிறார்!

"காங்கிரஸ் ஒன்றுதான் மக்களுக்கு நன்மை செய்யுமென்றும், இந்நாட்டில் சுபிட்சமும், சந்தோஷமும், சக்தியும் பெருகச் செய்யுமென்றும், அதனால் காங்கிரசிற்கு வோட்டுப் போட வேண்டுமென்றும் நான் கருதுகிறேன்!"

காங்கிரஸ் ஒன்றினால்தான் இந்த நாட்டில் சுபிட்சமும், சந்தோஷமும், சக்தியும் பெருகுமாம்!

அந்த 'ரசவாதம்' வேறெந்த எதிர்க்கட்சிக்கும் தெரியாதாம்! கூறியிருக்கிறார் இப்படி!

மொரார்ஜி தேசாய் எதை சுபீட்சமென்றும், சந்தோஷ மென்றும் கருதுகிறார்?

பம்பாய் மாநிலத்திலே அவரது ஆட்சிக் காலத்தில் இரத்த வெள்ளம் கரைபுரண்டு ஓடியதே அதுதான் அவரது அகராதிப்படி சுபிட்சத்திற்கு அடையாளமா?

கொடுங்கோல் சின்னங்கள் என்று கருதப்படுகிற டயர் சகோதரர்கள் ஆயிரம் ரவுண்டுகள்தான் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினார்கள்; ஆனால் இவரோ பத்து நிமிஷ நேரம் தொடர்ந்து, துப்பாக்கி ரவைகளை மழை யெனப் பொழிந்து இந்த மண்ணுக்கு உரியவர்களை மயானத்திற்கு அனுப்பி வைத்தாரே; அதுவா காங்கிரஸ் ஆட்சி சந்தோஷத்திற்குக் 'கியாரண்டி' என்பதற்குப் பொருள்?

—ஜனநாயக ஆட்சியில் விரும்பத்தகாத அந்தச் சம்பவங்களுக்கெல்லாம் சமாதானம் சொல்லாமல்; அவைகளை மக்கள் மன்றத்திலிருந்து மறைத்துவிடப் பார்ப்பதுதானா ஜனநாயக தர்மம்?

மொரார்ஜி தேசாய் மேலும் தொடர்ந்திருக்கிறார்:

"நான் கேட்டுக் கொள்கிறேன் என்பதற்காக காங்கிரசிற்கு வோட்டுப் போடவேண்டுமென்று சொல்லவில்லை. காங்கிரஸ் இதுவரை செய்துள்ள சேவை என்ன? எந்தக் கட்சி மீது நம்பிக்கை வைக்கலாம்? உங்கள் நம்பிக்கையைப் பெற்ற தலைவர்கள் யார்?—இதையெல்லாம் நன்றாகச் சீர்தூக்கிப் பார்த்து காங்கிரசிற்கு வோட்டுப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்!"

—சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமாம், காங்கிரஸ் செய்துள்ள சேவைகளை!

1954-55-ம் ஆண்டுக் காலத்தில் இந்திய உபகண்டத்தின் தபால் தந்தி இலாக்காக்களின் சேவையை மட்டும் இப்போது சீர்தூக்கிப் பார்ப்போம்.

அரசாங்கத்திற்கு வரி செலுத்தும் பொது மக்கள் அனுப்பி வைத்த பொருள்கள் பல அஞ்சல் இலாக்காவில் காணமற் போயிருக்கின்றன; பல களவு போயிருக்கின்றன; பல பழுதடைந்திருக்கின்றன.

மேற்சொன்ன பொருள்களுக்கெல்லாம் அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டு; நஷ்ட ஈடு கொடுத்திருக்கிறது.

இந்த நஷ்டஈட்டுத் தொகையின் மதிப்புமட்டும் சுமார் இருபத்தாறு கோடி ரூபாய்கள்!

இந்த கோடிக்கணக்கான நஷ்டஈட்டுத் தொகையில் முப்பத்தேழு சதவீதம் அளவுக்கு அதிகாரிகளின் பொறுப்பின்மையும், ஊழலுமே காரணமாயிருந்திருக்கிறது.

நஷ்ட ஈட்டுத் தொகையில் முப்பத்தி ஏழு சதவீத அளவினை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்தே வசூலிப்பதற்கு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

இருந்தும் ஆறரைக் கோடி ரூபாய் நஷ்டஈட்டுத் தொகைக்குக் காரணமாயிருந்த அதிகாரிகள் யாரென்று கண்டுபிடிக்க முடியவில்லையாம்!

—இதுபோன்ற ஒழுங்கீனங்கள் இந்த ஆண்டு மட்டும் திடீரென்று தோன்றிவிடவில்லை. தொன்றுதொட்டு; ஒவ்வொரு ஆண்டும் நிலவி வரும் ஊழலின் ஒரு தொடர்ச்சிதான் இது என்றும் அவர்கள் விளக்கம் தருகிறார்கள்!

அதுமட்டுமா?

மேற்சொன்ன அதே ஆண்டுக் காலத்தில் தபால் தந்தி இலாக்காவின் வருமானத்திற்கு ரூ. 7,63,27,000 நஷ்டமேற்பட்டிருக்கிறது.

இவ்வளவு பெரிய நஷ்டத்தை எந்த விதத்திலும் ஈடு செய்ய முடியாதென்று நினைத்து அந்தத் தொகையினைக் கணக்கிலிருந்தே நீக்கியிருக்கிறார்கள்.

அவ்வளவுதானா?

தபால் இலாக்காவினைச் சார்ந்து இயங்கிவரும் 'சேவிங்ஸ்' பாங்கியில்கூட ரூ. 4,23,00 நஷ்ட மேற்பட்டிருக்கிறதாம்!

—இது ஒரு ஆண்டில் ஒரு இலாக்காவில் நேர்ந்த ஊழல்!

—இதைக் குறைக்கவோ; அறவே நீக்கவோ முயற்சிக்கவில்லை, இன்று தேர்தலில் களத்திற்கு வந்திருக்கும் தேசியத் திருவாளர்கள்!

இருந்தும் வெட்கமில்லாமல் பேசுகிறார் மொரார்ஜி; எதிர்க் கட்சிகளால் இந்த நாட்டிற்குச் சுபிட்சம் ஏற்படாது-என்று!

பாவம்; அவர் ஊழலையும்; நிர்வாக ஓட்டைகளையும்தான் சுபிட்சமென்று கருதுகிறார் போலும்! பரிதாபத்திற்குரிய அவரை நம்பி ஏமாந்துவிடும் நிலையிலா பொதுமக்களிருக்கிறார்கள்?

# மறந்து விடாதீர்கள்!

1954–55–ம் ஆண்டிலே 78 லட்சம் ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, சென்னை அரசினருக்கு. விபரங்கள்:

| | | | |
|---|---|---|---|
| விவசாய இலாகா | | | |
| அரிசி விற்பனை டெண்டர் சரியானதாக இல்லாததால் ஒரு ஜில்லாவில் ... | 44.125 | 0 | 0 |
| மற்றொரு ஜில்லாவில் ... | 1,27.258 | 0 | 0 |
| ஸ்டாக் குறைவினால் ... | 2 765 | 0 | 0 |
| அதிகவிலை கேட்டவருக்கு விற்காததால் ... | 15 344 | 0 | 0 |
| கலாய் பைப்பு நஷ்டம் ... | 7,00 000 | 0 | 0 |
| லாரியினால் நஷ்டம் ... | 48 796 | 0 | 0 |
| அரிசி வியாபாரிகளால் ... | 2,40,616 | 0 | 0 |
| 6 அரிசி வியாபாரிகளுக்கு கலெக்டர் சிபார்சு செய்து' ... | 1,05,073 | 0 | 0 |
| 2 வியாபாரி இறந்துபோனதால் ... | 35,525 | 0 | 0 |
| டிராக்டர் வகையில் ... | 3.89 845 | 0 | 0 |
| மீன் வியாபாரத்தில் ... | 11.428 | 0 | 0 |
| மாஜி ராணுவப் படையினர் தொழிற்சாலை கட்ட இடம் வாங்குவதில் அஜாக்கிரதையினால் ... | 24 541 | 0 | 0 |
| கோழிக்கோடு பாக்டரியில் டாலோ மெழுகு சம்பந்தமாக விரயம் ... | 6 00,000 | 0 | 0 |
| பி. டிபுள்யு. டி. | | | |
| அகதிகளுக்கு வீடு வாங்கியதில் ... | 86 000 | 0 | 0 |
| உபயோகமற்ற டிராக்டர் ... | 8 045 | 0 | 0 |
| சானிடரி இஞ்சினீயர் உத்தரவு இல்லாமல் கட்டி இடிக்கப்பட்ட கட்டிடத்திற்கு ... | 37 500 | 0 | 0 |
| ரெவின்யூ | | | |
| கர்ணம்—முன்சிப் சாப்பிட்டது ... | 86 945 | 0 | 0 |
| வரி விகிதம் வசூலிக்காதது ... | 1,44 153 | 0 | 0 |
| சவுக்கு மரம் திருடுபோனது ... | 7,799 | 0 | 0 |
| குறைவான வரி போட்டதாலும் திருட்டுத்தனமான 'பாத்யதை' கொடுபட்டதாலும் ... | 36,510 | 0 | 0 |
| பூட்டு சாவி திருட்டுப் போனது ... | 12,735 | 0 | 0 |
| கோர்ட் வசூலைக் கையாடுதல் ... | 2,63,123 | 0 | 0 |
| அதிகப்படி பணம் கொடுத்தது ... | 5,295 | 0 | 0 |
| உருளைக் கிழங்கு வாங்கிய வகையில் ... | 59,452 | 0 | 0 |
| ஆஸ்பத்திரியில் மருந்து களவு போனது | 48,000 | 0 | 0 |
| போலீசுக்கு வீடு கட்டும் வகை ... | 14,840 | 0 | 0 |
| எலக்டிரிக் சாமான் களவு போனது ... | 64,274 | 0 | 0 |
| தவறான இடங்களுக்கு அஜாக்கிரதையில் அரிசி அனுப்பியது, வியாபாரிக்கு நஷ்டஈடு, கோவாபரேடிவ் சொசைடியில் வசூலாகாதது முதலியன ... | 36,50,114 | 0 | 0 |
| அஜாக்கிரதையாக பணம் கொடுக்கப்பட்ட வகை முதலியன ... | 48 140 | 0 | 0 |
| வட்டி இல்லாமல் கொடுக்கப்பட்ட பணம் முதலியன ... | 3,46,962 | 0 | 0 |
| மொத்தம் ரூ. | 50.55,008 | 0 | 0 |
| இன்னும் நெல் — அரிசி ... | 19,32,932 | 0 | 0 |
| கோதுமை வகையரா ... | 3,58,563 | 0 | 0 |
| இதர தானியங்கள் ... | 4,50.602 | 0 | 0 |
| கோணி ... | 11,312 | 0 | 0 |
| போக்குவரத்து சாதனங்கள் ... | 9.978 | 0 | 0 |
| மொத்த நஷ்டம் ரூ. | 27,63,387 | 0 | 0 |

இந்த நஷ்டத் தொகை அனைத்தும் தவிர்க்கக் கூடிய இனங்களே!

"இந்த நஷ்டத்திற்கு யார் ஜவாப்தாரி? ஜவாப்தாரியாரிடமிருந்து இந்த நஷ்டத்தை வசூல் செய்யும் வழியைக் கண்டுபிடிக்கவேண்டும். எந்தெந்த மந்திரிக்கும் எந்த உத்யோகஸ்தருக்கும் எவ்வளவு பங்கு என்பதையும் நிர்ணயம் செய்ய வேண்டும்" என்று துண்டறிக்கை மூலம் கேட்கிறார் காங்கிரஸ் பழம் புள்ளிகளில் ஒருவரான தோழர் சங்கு கணேசன்.

பொதுமக்களே! இவைகளையெல்லாம் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். மாட்டுப் பெட்டிக்கே உங்கள் ஓட்டு என்று உங்களை யாராவது கேட்க முன்வந்தால் நீங்கள் இந்தக் கேள்வியைத் திருப்பிக் கேட்கத் தவறாதீர்கள்.

# கேள்விக் குறிகள்

❊ 9–ம் பக்கத் தொடர்ச்சி

அடைத்திருப்பான். தெளிவில்லாத சிந்தனைகள் அவன் மன அரங்கின் ஊடே சஞ்சரித்து மக்கி மடிந்து கொண்டிருந்தன. சுகமான அவ்வுணர்வை கனமான ஒரு குரல் வெட்டி முறித்தது.

அவளுடைய அசைவுகள் எல்லாம் நின்று விட்டிருந்தன. கடின வேலைகளிலிருந்து அந்த யந்திரம் இளைப்பாறிக் கொண்டிருந்தது. அவன் விழித்துப் பார்த்தபடி சற்று நேரம் இருந்து விட்டான். அவனுடைய சித்தத்தில் முதன் முதலாகத் தோன்றின எண்ணம் அவள் இனி குழந்தை பெற மாட்டாள் என்பதுதான். அதை மெள்ள மெள்ள அவன் முணுமுணுத்தான்.

"இனி அவள் பிள்ளை பெற மாட்டாள்."

எழுந்து நின்று அவன் சோம்பல் முறித்தான். கட்டிச் சேர்ந்துகொண்டு கிடந்த குழந்தைகள்–அவர்கள் யாரும் இனிமேல் பிழைக்க மாட்டார்கள். என்ன வெல்லாமோ கடினமான கேள்விகளுக்கு விடை கிடைத்து விட்டது போலத் தோன்றியது அவனுக்கு.

மனதிற்கு சிறிது சாந்தியுண்டு. குழந்தைகள் இனியாருடைய சொத்து?

அவளுடைய அக்குளிர்ந்த உடலை வாறி எடுத்தான்.

"அப்பா! அம்மாவுக்கு என்ன?" மூத்த பையன் குட்டப்பன் எழுந்து கேட்டான்.

"ஒண்ணுமில்லைடா, படுத்துக்கோ!"

அச்சுமையைத் தரையில் வைத்துவிட்டு அவன் சொன்னான். குட்டப்பன் பக்கத்தில் வந்து அம்மாவை அழைத்தான்; குலுக்கி எழுப்பினான். அவள் பேசவில்லை.

"அப்பா! அம்மா ஏன் பேச மாட்டேங்கறா?"

அவனுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. பையன் அம்மாவின் நெஞ்சில் தலைவைத்து பரிதாபமாக அழுது அரற்றத் தொடங்கிவிட்டான்.

குழந்தைகள் எல்லோரும் ஒவ்வொருவராக எழுந்து வந்தார்கள். பரமு பயந்துவிட்டான். எல்லோரும் அணி நிரந்து நின்றபோதுள்ள அவனுடையப் பார்வையைப் பார்த்தால் ஒரு எதிரிப் படையே அவனைச் சுற்றி வளைந்து விட்டதோ வெனத் தோன்றும், ஜீவனில்லாத அவ்வோலம் தேய்ந்து மாய்ந்து மறைந்து விட்டது. அப்போதும் மூன்று குழந்தைகள் தாயின் நெஞ்சில் தலைவைத்துப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தன.

"இவர்கள் ஏன் பிறந்தார்கள்?"

இக்கேள்விக்கு விடை பரமுவிற்கு அப்போதும் கிடைக்கவில்லை.

* * *

என்றும்போல கிழங்கோ அரிசியோ வாங்கிக்கொண்டு அவன் வீட்டிற்குச் செல்வான். அங்கு யாரையுமே காணக் கிடைப்பதில்லை. அக் குழந்தைகள் சந்து முனைகளிலும் காப்பிக்கடை வாசல்களிலும் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கலாம். எப்படி எங்கு எல்லோரையும் தேடுவது? ஏதாவது கடை நடைகளில் கிடந்து அவர்கள் தூங்குவார்கள்.

சில நாட்கள் கழிந்தபோது அவன் வீட்டிற்குச் செல்லுவதும் நின்று விட்டது, அக் குடும்பம் கட்டவிழ்ந்து சிந்திச் சிதறிவிட்டது.

"அவர்கள் வளர வேண்டாமா?"

அவன் பதில் சொல்லுவான்

"வேணுமானு வளரட்டும்"

"யாருக்கு வேணுமானால்?"

"ஜனத் தொகை கணக்கு எடுப்பவர்களுக்கு"

* * *

குட்டப்பன் எல்லாவற்றிற்கும் இளைய குழந்தையைத் தோளில் போட்டுச் கொண்டு புகைவண்டி நிலையத்தின் பக்கங்களில் பிச்சை யெடுப்பதைப் பார்த்தவர்கள் இருக்கிறார்கள். ஒன்று சாலையோரத்தில் கிடந்து செத்தது. ஒரு பெண் குழந்தையை யாரோ இருதய முள்ளவர் எடுத்துப் போனதாகக் கூறப்படுகிறது. அப்படி இப்படி அத்தகைய கேள்விக் குறிகள் அழிந்து விட்டன.

* * *

நகரத்தின் ஜனச் சந்தடி அதிகமான ஒரு தெரு மூலையில் நின்று கொண்டு ஒரு கிழவன் யாரிடமோ கத்திக் கொண்டிருந்தான்.

"பரமு உயிரோடிருந்தானு என்பதற்கு கவர்மெண்டு ரிக்கார்டைப் போய்ப் பாரப்பா."

அங்குள்ள மதிற் சுவர்களில் எல்லாம் 'குட்டப்பன்' 'கோமதி' 'பாஸ்கரன்' இப்படிக் கொஞ்சம் பெயர்கள் எதற்காகவோ எழுதப்பட்டிருந்தன!

கிராமப்புறத்தின் சாலையோரத்தில் ஒரு மர நிழலில் கிடந்து அவன் இறந்தான். அங்ஙனம் குடும்பப் பாசத்தை நோக்கி எள்ளி நகையாடிக் கொண்டிருந்த அவ்விறுதிக் கேள்விக் குறியும் மாய்ந்தது!

## தீச்சுடர்

யந்திரம் பழுதாய் விட்ட காரணத்தால் டிசம்பர் திங்கள் முடிய வெளிவராதிருந்த தீச்சுடர், புதிய முறைகளுடன் பொங்கலுக்கு வெளி வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி

# காதலுக்குக் கண்ணில்லை

தொடர் நாடகம்

ப

பழிதீர்த்தான்: என் வாலிப நாட்களிலே எல்லாம் வெண்ணிலவு தணல் நிலவாக இருந்ததுண்டு. மன முருக்கிகளின் மோகன முறுவல்களிலும், அம்முறுவல்களை மூடிவைக்கும் முத்தங்களிலும்தான் வாழ்வு இருக்கிறது என்று எண்ணிய நாட்கள் அவை. காதல், காதல், காதல் — இன்றேல் சாதல், சாதல், சாதல் என்று கவிதை நடையில் சத்தியங்கள் செய்ததுண்டு. ஆனால் சாகவில்லை! உண்மைக் காதலன் வேடம் கூட அணிந்திருக்கிறேன். உறுதிமொழிகள் தந்திருக்கிறேன். ஆனால், காதல்தான் நிலைக்கவில்லை! நான் பொய்கள் சொல்லி, பூவையரை அணைத்ததுண்டு — பிறகு பிரிந்ததுண்டு. சுருக்கமாகச் சொல்லுகிறேன்—மனிதர்கள் பேசும் மிருகங்கள்—அவை கொள்ளும் மிருக இச்சைக்கு மெருகு கொடுக்கப் பட்ட பெயர்தான் காதல்.

ஆள: உங்கள் காதல் பாடம் என் காதைக் கெடுத்துவிடும் போலிருக்கிறது! உங்கள் பேச்சிலிருந்து தெரிகிறது, நீங்கள் பிறந்ததிலிருந்து இந்நாள் வரை காதலித்ததேயில்லை யென்று! காதலித்திருந்தால் இந்தக் கடுமொழிகளை வீச மாட்டீர்கள். காதல் வாழ்வின் லட்சியப் பட்டயம்—எங்கே நல்லெண்ணம் இல்லையோ, அங்கே நல்லெண்ணத்தைப் புகுத்தும்—இருள் மனத்தை ஒளி நிறைந்ததாக ஆக்கும்—பாழ் மண்டபமான உள்ளத்தை பளிங்கு மண்டபமாக மாற்றும்! காதல் அனல், அழுக்கேறிய மனத்தையும் மாசு நீங்கிய பொன்னாகப் புடம் போட்டுவிடும்! அது காற்று, மனப் பதர்களை விரட்டி, நற்குண நெல் மணிகளைக் குவிக்கும், மனக் களத்தில்! அது ஓர் அருவி, சாம்பலாகிக் கிடக்கும் மன வயலில் பாய்ந்து, நல்லெண்ணப் பயிரை வளர்க்கும்! அது ஓர் விளக்கு, மன இருட்டை விரட்டி விடும்! கடவுளர் மனிதரின் வாழ்க்கை வழி காட்டியாக இருந்த காலம் அந்தக் காலம் — கடவுளர் இடத்தில் காதல் இடம் பெற்றுள்ளது இந்தக்காலம்! ஒருவன், ஒருத்தியைக் காதலிக்கத் தொடங்கி விட்டானென்றால் அப்போதுதான் அவனுக்குக் கடவுளின் இரகசியம் தெரிகிறது — பரந்த இந்த உலகத்தின் இரகசியமே தெரிகிறது! மாடிக் கட்டிடமானாலும், மண் குடிசையானாலும், அங்கு வாழ்வோரின் இதயத்தில் தூய்மை யிருந்தால் அங்கு காதல் குடியேறுகிறது—இன்று இந்த மாளிகையின் வெளிவாயிற் கதவை இரத்தம் ஒழுகும் கொலை வந்து தட்டினால், காதல்—அன்பு—கருணை எல்லாம் அடிபட்ட நாய்போல் குரைத்துக் கொண்டே மடியும்! அதுதான் பாவத்திற்குக் கிடைக்கும் தண்டனை—கொடியவன் காதலிக்கவே முடியாது!

[மன்னன் மாளிகையிலிருந்து சப்தம் கேட்கிறது—

தில்லை வில்லாளன் எம். ஏ.,

யாரோ முனகும் ஒலிபோல அது. அதை ஆளவந்தான் கேட்டான்.]

ஆள: அந்தோ! கேட்கிறதா அந்த ஈனக்குரல்—அண்ணா, உங்கள் காதுகளில் விழவில்லையா? அது வேறொன்றுமில்லை! காதல் கொண்ட பெண்டிர் தம் கணவன்மாரை நீண்டநாள் வாழவைக்க வேண்டும் என்று இறைஞ்சும் குரல்தான். ஓ, பொன்மேனியாளே, என் அன்புச் சித்திரமே—உன் மீது கொண்ட காதல் என் கண்களைத் திறந்துவிட்டது! மன்னனைக் கொல்வதைவிட வாழவிடுவதன் மூலம், கண்ணியமான முறையில் பழிவாங்க முடிவு செய்து விட்டேன். நள்ளிரவிலே, கும்மிருட்டிலே, உலர்ந்து சருகுபோல் தோன்றும் மன்னனின் கழுத்தை அழுத்தி, எனது தளிர் நிலையில் உள்ள கரங்களால் கத்திகொண்டு குத்தி, இரத்த வெள்ளத்திலே மிதக்க விடுவதை விட, தினந்தினம், அவன், தன்னைப் பழிக்குப் பழி வாங்கும் ஒருவன் இருக்கிறான் என்பதை எண்ணி எண்ணிச் சாவதுதான் சாலச் சிறந்தது என்று கருதுகிறேன். அன்புதான் ஆண்டவன் என்றால், அவன், தன் எதிரிகளை மன்னித்து, தன் தவறை நினைந்து நினைந்து, மனம் நைந்து சாகவிடு என்று போதித்திருப்பான் ஆம், என் மனதிலே நீ ஏற்றிய காதல் தீப ஒளியில் நான் படித்த பாடம் இதுதான்!

ப: உபதேசம் புரியவா இங்கு வந்தாய்—உன் தந்தையின் கொலைக்கு பதில் கேட்கத்தானே! மடங்களில் பேச வேண்டிய பேச்சை, மணிமுடி தரிக்கும் மன்னன் மாளிகையில் பேசுகிறாய்—ஆண்டிகள் தலைவன் செய்யவேண்டிய பிரசங்கத்தை இந்நாட்டை ஆண்டிட வேண்டிய நீ பேசுகிறாய்! விந்தை நிறைந்த இந்த இரவு. இன்று வந்த விதம் அறியேன் தம்பி.

ஆள: வந்த விதம் எதுவானாலும் இந்த முடிவை மாற்ற எவராலும் முடியாது!

ப: தம்பி நீ, மிகவும் நல்லவன்—வீரன்—விவேகி என்ற நம்பிக்கை இன்னமும் மாறவில்லை — கொஞ்சம் யோசி! மன்னனைக் கொல்லாது விடுவதாலே, உன் மனம் கவர்ந்த ராணி, உன் அருகில் வந்து கன்னத்தோடு கன்னம் வைத்து, காதல் மொழி பேசுவாள் என்று நினைக்கிறாய்?

ஆள: ஐயோ, அவளின் எழில் வதனத்தை, இனி ஏறெடுத்தும் பாரேன்! அந்தப் பனி நிறை பார்வையாளைப் பிரிந்து பன்னிரண்டு மணிகள் பறந்துவிட்டன. அவளின் அன்பு இதயத்தின் கதவுகளைப் பலவந்தமாகத் திறந்தேன்—மிக முரட்டுத்தனமாக மூடிவிட்டு ஓடி விட்டேன்—இனி அவளை நான் பார்க்கவே மாட்டேன்.

ப: பின் என்ன செய்வாய்?

ஆ: வாளை, அந்த மன்னன் மார்பில் வைத்துவிட்டு, இன்றிரவே, அறவாழியை விட்டு அகல்வேன்.

ப: அகன்று......?

ஆ: அறநாட்டை அடுத்துள்ள புறநாடு செல்வேன். அங்கு மூண்டுள்ள போரிலே, என்னைப் படை வீரனாகச் சேர்க்கக் கேட்பேன்.

ப: பிறகு...?

ஆள: போரிலே கூரிய ஈட்டி யொன்றின் குறிக்கு இலக்காகி, மன நிம்மதியோடு மடிவேன்.

[மீண்டும் முனகல் சத்தம் கேட்டது.]

ஆள: அண்ணா, அதே குரல், இன்னும் மிகப்பரிதாபமாகக் கேட்கிறது! உங்களுக்குக் கேட்கவில்லையா?

ப: என் செவிகளில், எப்போதுமே கேட்டுக் கொண்டேயிருக்கிறது. இருட்டுச் சிறை யொன்றிலிருந்து, ஒடுங்கிக் கிடக்கும் ஒரு பெருஞ் சிலையின் வாயிலிருந்து கேட்கிறது! 'பழிக்குப்பழி வாங்கி விட்டாயா? பழி தீர்த்தான் என்று பெயர் படைத்தாயே' என்ற குரல் எப்பொழுதும் என் செவிகளில் விழுகிறது! தம்பி, நாம் காலத்தை வீணே கடத்துகிறோம்— போன காலம், திருப்பிக் கூப்பிட முடியாதது என்பர். வெகு விரைவில் காலை வர இருக்கிறது. முடிவாகச் சொல், மன்னனைக் கொல்ல மாட்டாயா?

அந்தோ, வெள்ளை மனத்தாரே, உங்களைப் போன்ற பரிதாபத்திற்குரிய மன்னரைப் பார்த்ததே இல்லை. நீர், இன்னமும், பழிக்குப்பழி வாங்காமல் பயங்கரச்சாவுப்

✲ 8-ம் பக்கம் பார்க்க

## நமது எதிரியின் பலம்!

"மேலே இருக்கும் பரணைத் தொடும் அளவிற்கு ஏணியின் உயரமும் இருக்க வேண்டும். மேலே இருக்கும் பரண் எவ்வளவு உயரத்தில் இருக்கிறதென்பதை நாம் தெரிந்து கொண்டால்தான் ஏணியில் நின்று கொண்டிருக்கும் நாம் அதை எட்டிப் பிடிக்க முடியும்!

"காங்கிரஸ் கட்சிக்கு செல்வாக்கு இல்லையென்றோ, பலம் இல்லையென்றோ, பல்லிழந்த புலியாகவோ கருநாகமாகவோ நாம் அதனைக் கணக்கிட்டால் நாம் ஏமாற்றப் பட்டவர்களாவோம்.

"காங்கிரஸ் கட்சிக்கு நாட்டை இரட்சிக்கும் சக்தி இல்லை யென்றாலும், நாட்டு மக்களை வாழ்விக்கச் செய்யும் வலிவு இல்லையென்றாலும் ஒரு தேர்தலைச் சமாளிக்கும் வலிவு பெற்றிருக்கிறது. நம்மிடம், மக்களை வாழ்விக்கச் செய்யும் திட்டம் இருக்கிறது; ஆனால் பணமில்லை!

"காங்கிரஸ் எவ்வளவுதான் உள்ளே ஆயிரக்கணக்கான ரோகங்கள் உடையதாக இருந்தாலும், அவற்றையெல்லாம் மூடி மறைத்துக் கொண்டு, பண பலத்தின் உதவியினால் மேனாமினுக்கி போல் நடமாடும் பணக்காரக் கட்சியாக இருக்கிறது."

—அறிஞர் அண்ணா

சாட்சி : 15

தெரு-கிராம வாசசாலை.

[ காங்கிரஸ் தோழர், கம்யூனிஸ்டு. தி. மு க. திராவிடர் கழகம், ஒரு நடு நிலைமையாளர் ஆகியோர் இருக்கிறார்கள் ]

நடுநிலைமை: என்னய்யா காங்கிரசு'... எலக்ஷன் வேலை யெல்லாம் ரொம்ப தீவிரமா நடக்கிருப்பல இருக்கு...

காங்கி; நாங்க என்ன தீவிரம்! எப்போதும் போலத்தான்! தீவிர மெல்லாம் தி. மு. க.தான்!

தி. மு. க: அது உண்மைதான்! தீவிரம் தி. மு .க. தான்! ஆனல் தேர்தல் தீவிரம் அங்கேதான்.

காங்: என்னய்யா அப்படிச் சொல்றே உங்க பிரச்சாரம் நடக்காத ஊரே இல்லே'...நாளே இல்லே! தேர்தல் நிதிவேறு எங்கு பார்த்தாலும் கொடுத்துக்கிட்டேயிருக்காங்க...

தி. மு க: என்னய்யா எங்க நிதி? உங்க காங்கிரசிலே ஒரு ஆளு கொடுக்கிற நிதியை எங்க ஆளு ஆயிரம்பேர் சேர்ந்து கொடுக்கிருங்க: நூறு பேர் போய் வாங்கிருங்க!...

காங்: என்ன இருந்தாலும்... சிறப்புக் கூட்டத்துக்கு ஆயிரம் ஐநூறன்னு வசூலாவது ரொம்ப ஆச்சரியமா இருக்கய்யா!...

திராவிட கழகம்: பெரிய ஆச்சரியமாக்கும்!... சிறப்புக் கூட்டம் யார் போட்டாலும்தான் வசூலாகும்... எங்க குருசாமி பேசினுக் கூட ......

காங்: அட சும்மா இரய்யா... நீயும் நானும் மகாநாடு போட்டு கட்டணமே இல்லேன்னு விளம்பரப்படுத்தினுகூட காலி இடந்தான் அதிகமாக் கண்ணுக்குத் தெரியுது!...என்னமோ எப்படியோ அவுங்க பேச்சிலே ஒரு மயக்கம் இருக்கு ஜனங்களுக்கு!...

தி. மு. க: மயக்கமில்லே...உண்மையிருக்குன்னு சொல்லுங்க!...

தி. க: எல்லாம் சினிமா மவுசு! கொஞ்ச நாளேக்கு அப்படித்தான் இருக்கும்.

காங்கி: என்னய்யா தி. மு. க! இதுக்கு என்னய்யா பதில் சொல்றே?

தி. மு. க: பதில் சொல்ல முடியாமல் இல்லே! பதில் சொல்ல விரும்பவில்லே... ரத்தக் கண்ணீர் வருகிற அளவுக்கு அவர்கள் பேசினுல்கூட; எதிர்த்து அவர்களோடு வாதிட்டு வீண் சச்சரவுகளே உண்டாக்கிக் கொள்ள வேண்டாமென்று எங்கள் தலைவர்களின் கட்டளே!......

காங்: அப்படின்னு நேருக்கு நேர் பேசமாட்டீங்க! மறைமுகமா மட்டரகமா தாக்கிக் கொள்வீங்க...!

தி. மு. க: நாங்க நடத்துகிற பத்திரிகை "நம் நாடு"! நீங்கள் வேறு எதையோ படித்து விட்டுத் தவருன கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்!......மட்ட ரகமான பாஷைக்கு...எங்கள் கழகத்திலேயே இடமில்லே!

தி. க: ரொம்ப யோக்யர்கள் மாதிரி பேசுகிருர்களே; தேர்தல் நிதிக்கு இவர்கள் வீடு வாசல்களே விற்காமல் பெண்டாட்டியின் நகை நட்டுகளே விற்காமல் ஜனங்களிடம் நிதி திரட்டுகிருர்களே; ஏன்?...

காங்: ஓய்—தி. மு. க!...இதை நான் கேட்பதாகவே வைத்துக் கொண்டு பதில் சொல்லு. பார்ப்போம்!

தி. மு. க: எங்களுடைய வீடு வாசல்களே விற்காமல், நகை நட்டுகளே விற்காமல்—ஜனங்களுடைய நகை நட்டுகளேயும் வீடு வாசல்களேயும் விற்பனே செய்தா தேர்தல் நிதி கொடுக்கச் சொல்லுகிறோம்—இல்லேயே!...யாருக்கும் கஷ்டமில்லாத வகையில் ஒரணு இரண்டணுவாக நிதி திரட்டுவதிலே என்ன தவறு?...யார் யாரோ கார் வாங்குவதற்குக்கூட மக்களிடம் நிதி திரட்டுகிருர்கள்; ஒரு அரசியல் கட்சி, தனது தேர்தலுக்காக நிதி திரட்டுவதா தவறு?...

வீடு வாசல்களே விற்பது தானே என்று கேட்கிருர்கள்; தி. மு. க. தலைவர்களின் வீடுகளே யெல்லாம் விற்ருல்கூட ஒரு லட்சம் ரூபாயை எட்டிப் பிடிக்காதே!...எங்கள் கழகத்தில் எல்லோருமே பஞ்சைகள்தான்!...பராரிகள் தான்! உழைத்தால்தான் வாழ முடியும் என்ற நிலையிலுள்ள பாட்டாளிகள்தான்!...

நடுநிலைமை: என்ன சார் கம்யூனிஸ்டு!...தி. மு. கழகம் பாட்டாளி இயக்கமாமே......நீர் வாயை மூடிக்கொண்டு இருக்கிறீரே; என்ன சங்கதி?...

எங்கேயோ கவனமாக மாக இருந்த

கம்யூ: யார் சொன்னது?... நாங்கள்தான் பாட்டாளிகள்!...எங்கள் கட்சிதான் பாட்டாளிக் கட்சி! தி. மு. கழகம் முதலாளிக் கட்சி!...பி. டி. ராஜனேப் போன்ற தலைவர்களேக் கொண்ட கட்சி!

தி, மு, க. : காம்ரேட்! காம்ரேட்! கொஞ்சம் நிறுத்துங்க! பி, டி. ராஜன் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்னு யாரய்யா சொன்னது?...ஏனய்யா இப்படியெல்லாம் அதிர் வெடிகள் போடுறீங்க... உங்க தலைவர் ஒருத்தர் கூட சமீபத்திலே திருச்சியிலே அப்படித்தான் பேசினுராம்;...தி. மு. கவுக்குத் தலைவர் பி டி. ஆர். தான் என்று!......

கம்யூ: தலைவர் இல்லாவிட்டாலும் தலைவர் மாதிரிதான்!

தி. மு க: உங்க கட்சிப் பழக்கமே இப்படித்தானய்யா! ...ஜனங்களிடம் என்னென்ன பொய்களேச் சொல்லி அவர்களே உங்கள் பக்கம் திருப்பலாம் என்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிறீர்கள்...

கம்யூ; இது ஒன்றும் பொய்யில்லே...பி, டி. ராசனேடு நீங்கள் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது நூற்றுக்கு நூறு உண்மை!

தி. மு. க: ஓகோ, பிப்ரவரி 20-ம் தேதி பொது வேலே நிறுத்தத்தின் போது தொடர்பு கொண்டிருந்தோமே—அதைச் சொல்லுகிறீரா?...அன்புள்ள தோழரே!...அப்போது நாங்கள் மட்டுமல்ல—உங்கள் கம்யூனிஸ்டுக் கட்சியும், தமிழரசு, சோஷலிஸ்டுக் கட்சிகளும் கூட அவருடைய தலைமையில் தான் அணி வகுத்து நின்ருேம் என்பதை மறந்து விடாதீர்!...

கம்யூ : என்ன இருந்தாலும் அவருக்கு உங்கள் மீது கொஞ்சம் அதிகமாகவே பிரியம் உண்டு!......உங்களுக்கும் அவர் மீது ஆசை உண்டு!...

தி. மு. க : ஆசை; பிரியம் வேறு! அவர்களுடைய கொள்கைகளுக்கு இணங்கி விடுவது வேறு! சென்ற பொதுத் தேர்தலில் ஜி. டி. நாயுடுவை தேசீய முதலாளி என்ற புதுப் பட்டத்தோடு ஆதரித்துப் பிரச்சாரம் செய்தீர்கள்—அதற்குள் பழசை மறந்து விட்டு...எங்கள் மீது பாய்கிறீர்கள்?......நாயுடுவை ஆதரித்த வேகத்தில் அவருடைய முதலாளித்துவத்தையும் ஏற்றுக் கொண்டீர்கள், அதற்குப் புது மெருகும் கொடுத்தீர்கள்! ......என்னதான் பி. டி. ஆருடன் பாசமும், நேசமும் கொண்டிருந்தாலும் "அய்யப்பசாமி"க்கு சரணடைய மாட்டோம் நாங்கள்!......... திராவிட அய்யப்பசாமி என்ருே, தேசீய அய்யப்பசாமி என்ருே புதுப் பெயரிட்டும் வணங்க மாட்டோம்: ...உங்கள் "தேசீய முதலாளி" போல!—

கம்யூ: அதிருக்கட்டும்—திருச்சியிலே எங்கள் தலைவர் பேசியிருக்கும் இன்னெரு

விரைவில் துவக்கம்!

ஆசிரியர்

மு. க. வின்

சுருளிமலை

புதிய தொடர்கதை

விஷயத்துக்கு உங்களால் பதில் சொல்ல முடியுமா?.......சட்டசபையில் உங்கள் கோவிந்தசாமியும் ஆத்தூர் சுப்பிரமணியமும் சாதித்தது என்ன?

தி. மு. க: அதை, இதோ இருக்கும் காங்கிரஸ் நண்பரிடமல்லவா கேட்கவேண்டும்! —இவரே எத்தனை முறை என்னிடம் சொல்லியிருக்கிறார்; "ஏயப்பா — உங்க ஆளுங்க ரெண்டு மூணு பேர் இருந்துகிட்டு எங்க மந்திரிகளை பாடாபடுத்துறுங்க"ன்னு!--எங்க ஆளுங்க சட்ட சபையிலே சாதித்தார்களோ இல்லையோ; ஆனால் — உங்கள் தலைவரைப் போல ஆச்சாரியாருடைய கல்வித் திட்ட எதிர்ப்பு வோட்டெடுப்பின்போது சட்டசபைக்கு வராமல் ஒதுங்கி யிருந்து ஆச்சாரியாருக்கு வெற்றி தேடிக் கொடுத்து துரோகம் செய்யவில்லை என்பதை மட்டும் மறந்து விடாதீர்!...உங்கள் தலைவர் மாத்திரம் இருந்திருந்து அந்த ஒரு ஓட்டைப் போட்டிருப்பாரே யானால் அப்போதே ஆச்சாரியார் ராஜினமா செய்துவிட்டு ஓடியிருப்பாரே—

நடுநிலைமை: சரி சரி......கட்சி விஷயம் விட்டுட்டு வேற விஷயம் பேசுங்க......அது வேற தகராறில் வந்து முடியப் போவுது!

தி. மு. க: தகராறு ஏங்க வருது?......நாமெல்லாம் அண்ணன் தம்பிகள் மாதிரி!...கொள்கையிலே வேறுபாடுகள் —அவ்வளவுதானே! கடமையும் கண்யமும் கடைப்பிடிக்கப்பட்டால் எல்லாக் கட்சிகளுமே தங்கள் கொள்கைகளை அமைதியாகப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கலாம்.

காங்: சொல்றது சரிதான்—ஆனால் தேர்தல் நேரத்திலே கண்யமா;நாணயமா பிரச்சாரம் செய்றதுங்கிறது முடியாத காரியம்!

தி. மு. க: ஒரு வேளை காங்கிரஸ்காரர்களாலே முடியாமலிருக்கலாம்—எங்கள் கழகத்தார் அந்த ஒழுங்கிலிருந்து ஒரு அணுவும் பிசகமாட்டார்கள்!

நடுநிலை: ஏனய்யா காங்கிரசு?...நம்ப ஊர் தேர்தல் விவகாரம் எல்லாம் எப்படியிருக்கு?...

[அப்போது பலவேஷம் வந்து கொண்டே]

பலவே: எப்படியிருக்கா? என்னைக் கேளுங்க; சொல்றேன்! சமயோஜிதம் பிள்ளை மகள் கண்ணம்மாவுக்கும் ஆனை மூஞ்சிப் பிள்ளைக்கும் திருமணம் நிச்சயமாகி விட்டது!...

# பொங்கல் மலர்

## தனிப்பிரதி வேண்டுவோர் கவனிக்க!

பொங்கல் மலர் தனிப்பிரதி தேவைப்படும் தோழர்கள் ரூ. 2—12—0 அனுப்பி இப்போதே பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம், சாதாரண தபால் மூலம் அனுப்புவதால் நிச்சயம் மலர் கிடைக்கும் என்ற உறுதிதர இயலாதாகையால் பதிவுத் தபால் மூலம் மட்டுமே அனுப்பப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி.

நடுநிலை: என்னய்யா நான் தேர்தலைப் பத்திக் கேட்டா—நீ திருமணத்தைப் பத்தி சொல்றே?

பல: திருமணம் செய்து கொண்டுதான் தேர்தலுக்கு நிற்பது என்று ஆனை மூஞ்சிப் பிள்ளை சபதம் செய்திருந்தார்... திருமணம் நிச்சயமாகி விட்டது — எம். பி. க்கு நாமினேஷன் போட்டு விட்டார்!—மகளைக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டுத்தான் தேர்தலுக்கு நிற்பது என்று சமயோஜிதம் பிள்ளை சபதம் போட்டிருந்தார்—இப்போது அவரும் எம். எல். ஏ. வுக்கு நாமினேஷன் போட்டு விட்டார்!...

நடுநிலை: அய்யோ சமயோஜிதம் பிள்ளையும் நிக்கப் போறாரா?... அவரால நிக்க முடியுமா?...

பல; ஏன்; அவருக்கு என்ன கால் நொண்டியா?...... இப்பவே ஆயிரம் வோட்டுக்கு மொத்தமா ஒருஆளுகிட்டே அட்வான்ஸ் கொடுத்தாச்சு; தெரியுமோ?...

நடுநிலை: ஏன் வீடு கட்டப் போறாரோ?......ஓட்டுக்கு அட்வான்ஸ் கொடுத்திருக்காருன்னு சொல்றியே!

தி. மு. க: ம்! மனிதனுடைய வாக்குரிமை எவ்வளவு கேவலமான விலைப்பொருளாகி விட்டது; பார்த்தீர்களா?...தன்னுடைய சுயமரியாதையையே மனிதன் காசுக்காக விற்று விடுகிறான்!........இப்படிப்பட்ட நாட்டில் அரசியல் விழிப்பும் விடுதலைத்தாகமும் எப்போதுதான் ஏற்படுமோ...

பல: யார் தம்பி...தி. மு. க. வா?

தி. க: இல்லை இல்லை......கண்ணீர்த் துளி!...

பல: அப்படின்னா?...

தி. க: எங்க பெரியார் கல்யாணம் செய்து கொண்ட போது இவர்கள் எல்லாம் கண்ணீர் விட்டார்கள்!... அதனால் இவர்கள் கண்ணீர்த் துளிகள்!...

பல: (சிரித்தபடி) சபாஷ்! நல்ல பேர்!......நல்ல பேர்!...... ஆனால் ஒன்று......நீங்கள் இவர்களைக் கண்ணீர்த் துளி என்று கூப்பிடும் போதெல்லாம் பெரியார் கல்யாணம் ஞாபகம் வருமே!...

தி. மு. க: அப்படி ஞாபகம் வரவேண்டும் என்றுதான் நாங்களும் அந்தப் பட்டத்தை ஏற்றுக் கொண்டு அலட்சியமாக இருக்கிறோம்,

பல: சரி நான் வருகிறேன்— தேர்தல் வேலைகள் ஏராளமாக இருக்கின்றன!...

நடுநிலை: கல்யாணம் தேர்தலுக்கு முந்தியா? எந்தத் தேதியிலே?...

பலவே: எலக்ஷனுக்கு முதல் நாள் கலியாணம்—அன்னைக்குத்தான் நல்ல நாள் இருக்காம்—அய்யர் சொல்லி விட்டார்!...

நடுநிலை: எலக்ஷன் சமயத்திலே ரொம்ப சங்கடமாயிருக்குமே!...

பலவே: அய்யாவுக்கு என்ன சங்கடம்?...பணமிருக்கு- இந்தப் பல வேஷம் இருக்கான்!...

அதோட மட்டுமா?...மணமகள் கண்ணம்மாவே எலக்ஷன் பிரச்சாரத்துக்கு ஊர் ஊராகப் போய்க்கொண்டிருக்கிறாள்—தியாகி கறுப்பனும் கண்ணம்மாவும் கிராமம் கிராமமாக தொகுதி முழுதும் சுற்றுப் பயணம் செய்து காங்கிரஸ் ஐந்தாண்டுத் திட்டத்தின் பயன்களைப்பற்றி விளக்குகிறார்கள்!

நடுநிலை: அப்படியா?

பலவே: ஆமாம்!...அடுத்த வாரம் நம்ப ஊரிலே பெரிய மகாநாடு!...ஆனை மூஞ்சிப் பிள்ளைதான் தலைவர்!...சமயோஜிதம் பிள்ளை திறப்பாளர்!......அதிலே...ஒரு விசித்திரமான நிகழ்ச்சி...கறுப்பனும், கண்ணம்மாவும் குறவன் குறத்தி வேஷம் போட்டுக் கொண்டு, காங்கிரஸ் தேர்தல் பிரசாரம் நடத்தப் போகிறார்கள்!...

நடுநிலை: என்னது...கண்ணம்மா குறத்திவேஷமா? கல்யாணப் பெண்ணு?... ஆனைமூஞ்சிப் பிள்ளை சம்மதிப்பாரா?...

பல: அவருக்குத்தான் கண்ணம்மா கிடைச்சா போதுமே!...... அதுவும் அவளே அவரைப் பத்திப் பேசி அவருக்கு வோட்டுப் போடச் சொல்றதுன்னு சாமான்யமா?... ஓட்டு குவியாதா?...

வந்து பாருங்களேன் மகாநாட்டை!...லட்சம் நோட்டீஸ்! பத்தாயிரம் சுவரொட்டி! பத்திரிகை விளம்பரம்!...ஒரு ஐநூறு பேரையாவது மகாநாட்டுக்கு எதிர்பார்க்கிறோம்—பிரம்மாண்ட மகாநாடு!... ஐந்தாண்டுத் திட்டப்பிரச்சார மகாநாடு!...

ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சார மகாநாடு!...

(உரக்கக் கூறுகிறார் பலவேஷம்)

[திரை சுருளுகிறது]

—(அடுத்த இதழில் முடியும்)

# தி. மு. க. வில்லை (பாட்ஜ்)

★

தி. மு. கழகக் கொடி வட்ட வடிவில் (மேற்பாதி கருப்பு—கீழ் பாதி சிவப்பு) பொறிக்கப் பட்டு, அந்த வட்டத்தைச் சுற்றி அமைந்துள்ள வெள்ளை வளையத்தில் மேலே தி. மு. க. என்ற எழுத்துக்களும் கீழே 'வருக! வெற்றி தருக!' என்ற சொற்றொடரும் எழுதப்பட்டு, சட்டையில் குத்திக் கொள்ளுவதற்கு ஏற்ற வகையில் வில்லை (பாட்ஜ்) தலைமை நிலையத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வில்லை சாதாரண நாட்களிலும், தேர்தல் காலத்திலும் கழகத் தோழர்களும், தேர்தல் பணியில் ஈடுபடும் தொண்டர்களும் அணிவதற்கு ஏற்றதாகும்.

## வில்லையின் விலை அணா 6.

விற்பனைக் கழிவு என்று கிடையாது. வெளியூர்க் கிளைகள் 25 வில்லைகளுக்குக் குறையாமல் எத்தனை வில்லைகள் வேண்டுமோ, அளவளவுக்குரிய தொகையை முன் கூட்டியே தலைமை நிலையத்திற்கு அனுப்பி வைத்தால், தலைமை நிலையச் செலவில் அவை அனுப்பி வைக்கப்பெறும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

# அவரும் இவரும் ....

"அண்மையில் காஞ்சிபுரத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பக்தவத்சலம், 'நாட்டில் இன்றுள்ள ஒரே ஒரு பிரச்சினை என்ன தெரியுமா?' என்று கேட்டு, 'அண்ணாதுரைக்கு செல்வாக்கு அதிகமா? நேருவுக்கு செல்வாக்கு அதிகமா?' என்று கேட்டாராம்! கூடியிருந்த மக்கள் திகைத்துத் திணறித் திண்டாடி விட்டார்கள்! 'இதென்ன மந்திரிக்கு இது கூடத் தெரியாதா?' என்று கூடக் கேட்டு விட்டனர்! நான் கூறுகிறேன்—நான் தூங்கிக் கொண்டிருக்கும் போது திடீரெனத் தட்டி எழுப்பிக் கேட்டால் கூடச் சொல்லுவேன்—நேருவுக்குத்தான் அதிகச் செல்வாக்கு—என்று!...

"பக்தவத்சலம், அவருடைய தலைவனின் தயவால்—நேருவின் தயவால் வாழ்கிறார்; நான் மக்கள் தயவால் வாழ்கிறேன். நேருவின் செல்வாக்கு வளர்ந்து ஒரு எல்லையைக் கண்டு விட்டது; ஆனால் அண்ணாதுரையின் செல்வாக்கு இப்போதுதான் வளரத் துவங்கியிருக்கிறது. எனவே, கட்டி வைக்கப்பட்டிருக்கிற கோபுரத்திற்கும் கொட்டி வைக்கப்பட்டிருக்கிற செங்கல்லுக்கும் உவமை காட்டுவானேன்?"

—அறிஞர் அண்ணா

## காதலுக்கு...

❊ 5-ம் பக்கத் தொடர்ச்சி

படுக்கையில் கிடக்கிறீர்—இது கொடுமை!

ஆள : அதைவிடத் தாங்க முடியாத கொடுமை, அவர் மகன் ஒரு கொலைகாரன் என்ற பழிப் பெயரோடு திரிவது!

ப : தம்பி, உயிரை என்னவென்று தான் நினைக்கிறாய்?

ஆள : அண்ணா, அந்த விளக்கத்தை நான் அறியவில்லை ஆனால், ஒரு விளக்கம் எனக்குத் தெரியும். நான் உயிரை யாருக்கும் தரவில்லை; தரவும் முடியாது—ஆகவே எந்த உயிரை எடுக்கவும் நான் தயாராக இல்லை!

ப : நான் கடவுளுக்கு அடிக்கடி வந்தனை, வழிபாடு செய்யும் பழக்கமில்லாதவன்—ஆனால் நான் ஆண்டவனை வணங்குகிறேன் இப்போது—ஏன் தெரியுமா? எனக்கொரு மகன் இல்லையே என்பதற்காக! மகனும் இருந்து அவன் உன்னைப் போன்றவனாக இருந்தால், என் மனம் எவ்வளவு பாடுபடும்? தம்பி, உன் உடலில் ஓடும் குருதியில், கோழைத்தனம் குழைந்திருக்குமென்று நான் நினைக்கவில்லை—கூடேறிக் கிடக்கிறது என்று தவறாக முடிவு செய்து விட்டேன்—உன் பிடியிலே உன் பிறவி எதிரி சிக்கியிருக்கிறான்—அவனைத் தப்பி ஓட விடுகிறாயே—நான், உன் பிறப்பில், வளர்ப்பில் புதைந்து கிடந்த இரகசியங்களைக் கூறாமலிருந்தால்கூட மன நிம்மதியோடிருப்பேன்.

ஆள : அப்படிச் செய்திருந்தால்கூட மிக நல்லதாகவே இருந்திருக்கும்—அதைவிட நான் இந்தத் துன்ப உலகில் பிறவாமலே இருந்திருந்தால் அதை விட நன்மையாக இருந்திருக்கும்!

ப : தளர்ந்த மனத்தோடு பிரிகிறேன்—விடை கொடு—நீ கொடுப்பதென்ன, நான் போகிறேன்!

ஆள : அண்ணா, வணக்கம்—இன்றில்லா விட்டாலும் நாளை, நாளையில்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள், எனது பழிவாங்கும் திட்டமே சிறந்தது என்று உங்கள் வாயாரக் கூறுவீர்கள்!

ப : இந்த வாய் அப்படி ஒரு நாளும் துரோகம் செய்யாது!

[பழி தீர்த்தான் இருள் சூழ்ந்தமனத்தினனாய் திரும்பிப் போய்விட்டான். ஆளவந்தான் மட்டும், அவன் இறங்கிச் செல்லும் மாடிப்படி, சாரளத்தின் வழியே பார்த்தபடியிருந்தான். திரும்பினான், திடுக்கிட்டான். ஏதோ ஒரு கரிய உருவம் தப்பி வெளியில் ஓடியது. மேலே ஒரு சப்தம் கேட்கிறது.]

### காட்சி--25

[மாடியின்மீது ஏறி நிற்கிறான் ஆளவந்தான்.]

ஆள: அன்புத் தந்தையே, கண்ணியமான முறையில் நான் பழிவாங்கத் திட்டமிட்டிருப்பதைக் கண்டு மனத் திருப்தி கொள்வீர்கள் என மனப்பூர்வமாக நினைக்கிறேன். இந்த மனிதனை அச்சத்தால் தினந்தினம் நெஞ்சொடிந்து நாட்களை தள்ளிவிடுவதன் மூலம் பழிதீர்த்துக் கொள்வதையே தாங்கள் உயிருடனிருந்தாலும் செய்வீர்கள் என்று கருதுகிறேன். மனிதக் குரல் இறப்புலகின் இரும்புக் கதவுகளைத் திறக்கும் சக்தி வாய்ந்தனவோ, என்னவோ அறியேன். மேலும், அந்த இறந்தவர் உலகில் இருப்பவர்களுக்கு, இங்கு அவர்களுக்காகப் பரிந்து புரியும் செயல்கள் தெரியுமோ, தெரியாதோ அறியேன். ஆனால் இந்தக் காற்றசைவிலே, ஒரு காலடியோசையைக் கேட்கிறேன். கற்பனை அறிவின் மூலம் என் அருகில் ஒரு உருவைப் பார்க்கிறேன். அவ்வுருவம் என்னை அணைத்து அன்போடு ஒரு முத்தமிடுவதாக உணர்கிறேன். முத்தம் பெற்ற உதடுகள், சுத்தப்படுத்தப் பட்டன போல் அறிகிறேன்.

[ஆளவந்தான் மண்டியிடுகிறான்—மன்றாடுகிறான்.]

ஐயோ, என்னைப் பெற்ற தந்தையே தாங்கள் என் அருகில் இருக்கிறீர்களா? தாங்கள் என் பக்கத்திலிருந்து என் நடவடிக்கைகளை கண்டு களிப்பது உண்மையானால், தங்களின் தங்கக் கரங்களைத் தங்களின் அன்பு மகன் தொட்டுணர்ந்து சுகம் பெற நீட்டுங்கள். தந்தையே, பிறந்த நாளிலிருந்து, தங்களைப் பார்த்து மகிழும் பேறு பெறாத மகன் இறைஞ்சுகின்றேன்...சே, என்ன பைத்தியக்காரதனம்—என் தந்தை இங்கு எப்படி வரமுடியும்? (எழுந்திருக்கிறான்) எல்லாம் இரவின் ஏமாற்று வேலைகள்—இல்லாதவைகளை, இருப்பன போலக்காட்டி ஏய்த்துவிட்டுப் பிறகு கைகொட்டி நகைபதே இரவெனும் சிறுவனின் வேலை! மணியாகிறது—என் பணி முடிந்தாக வேண்டும் (தனது பையிலிருந்து ஒரு கடிதத்தைப் பிரிக்கிறான்—மனதிற்குள் படிக்கிறான்) மன்னன் புலிவலன் விழித்தவுடன், தன் இறந்த கால வாழ்வை எண்ணி இரங்குவானா—இனி நம் வாழ்வைத் தூய்மைப் படுத்திடுவோம் என உறுதி கொள்வானா—அல்லது, எதிரியை பழிவாங்காது விட்டு விட்டான் ஒரு கோழை என என்னை ஏளனம் செய்வானா—நான் அறியேன். ஆனால் தந்தையே, தங்களின் கட்டளை இதுவெனவே நம்பிச் செல்கிறேன்.

[ஆளவந்தான் மன்னன் அறை நோக்கி நடந்தான். காலடியோசை துளியும் கேட்காமல். அடிகளைப் பெயர்த்து வைத்து நடந்தான். அறை வாயிலின் திரையை விலக்கப் போனான். அவன் முதலில் கேட்ட காலடியோசை இப்போது தெளிவாகக் கேட்டது அவன் பக்கத்தில் வெள்ளுடை அணிந்து பொன் மேனியாள் நின்று கொண்டிருந்தாள்.]

ஆள : வானுலகை விட்டு வந்த அருள் மங்கையே இவள்—பழி வாங்குவதைவிட அருள் புரிவது எவ்வளவு மேலான பண்பு!

பொ : நான்கூட அருள் வேண்டித்தான் நிற்கிறேன்.

ஆள : பொன்னான குணங் கொண்ட என் கண்ணான தந்தையே! தங்கள் கட்டளைப்படித்தான் நான் காத்திருக்கிறேன் — இல்லாவிட்டால் அன்பின் திருவுருவமான இந்த ஆரணங்கு ஏன் என் பாதையில் குறுக்கிடுகிறாள்?

பொ : என்னை ஆளவந்த அன்பரே, அன்பின் மிகுதியிலே என் முன் புரியாத மொழிகளை வீசுகிறீர்கள்—நான் நடந்ததை மறந்துவிடுகிறேன் என்னை அனலிடைப் புழுவாய்த் துடிக்க விட்டுப் பிரிந்தாலும் இப்போதும் வந்து சேர்ந்து விட்டீர்கள் என்ற மகிழ்ச்சியிலே அந்தப் பிரிவை மறந்துவிடுகிறேன். ஏன் என்னைப் பிரிந்தீர்கள்? இப்படிக் கேட்க ஆவல் தூண்டினாலும், அவசரம் வேறொரு கேள்வியை என் மனதில் கிளப்பிவிட்டுள்ளது. இப்போது என் அருகிலே தாங்கள் இருக்கிறீர்கள்! அன்பா, இன்னும் கொஞ்ச நேரத்தில் காலை வர இருக்கிறது. அதற்குள் நாம் நமக்காகக் காத்திருக்கும் குதிரைகளில் ஏறி, காடு மலைதாண்டி, அறநாட்டைக் கடந்திடவேண்டும். அன்பா, என் மீது தாங்கள் கொண்டுள்ள காதல் உறுதி வாய்ந்ததுதானே?

ஆள : குயில், வசந்தத்தை விரும்புவது உறுதி வாய்ந்ததுதானே என்று கேள் கண்ணே!

பொ : எதுவும், இந்த உறுதியைக் குலைத்திட முடியாதே?

ஆள : உலகமே எதிர்த்தாலும், இந்த உறுதியைக் குலைத்து விட முடியாது...

பொ : நம் காதலுக்கிடையே எந்தத் தடையும் இல்லையே, இப்போது?

ஆள : இந்த உலகில் எதுவும் நமக்குத் தடையாக இருக்க முடியாது.

பொ : அதை நான் பார்க்கிறேன் இப்போது

ஆள : ஆனால் கண்ணே, ஒரு கண நேரம் எனக்காகக் காத்திருக்க வேண்டும்.

பொ : முன் போல், என்னை வாடவிட்டு ஓடிவிட மாட்டீர்களே!

ஆள : கண்ணே, தேடக்கிடைக்காத தெள்ளமுது நீ—உன்னை உண்ண ஒரு கோடி ஆண்டு காலம் காத்திருந்தாலும் வாய்ப்புக் கிடைப்பதரிது—அரிது! உன்னை விட்டு ஏன் ஓடப்போகிறேன்? நான் இப்போது மன்னன் படுக்கையிடத்திற்குச் சென்று அவன் மார்பில் இந்தக் கடிதத்தையும் கட்டாரியையும் வைத்துவிட வேண்டும். அவன் விழிக்கும் பொழுது......

பொ : யார் விழிக்கும் பொழுது?

ஆள ; ஏன், மன்னர்தான்!

பொ : அவர் இனி எப்பொழுது மேவிழிக்க மாட்டார்.

ஆள : மன்னன் இறந்து விட்டானா?

பொ : ஆமாம், இறந்தே விட்டார்.

● தொடரும் ●

# கேள்விக் குறிகள்

மூலம் : தகழி
தமிழில் : ' விதிவிலக்கன் '

அது ஒரு காதல் கல்யாணம்கூட. அதனுல் அந்தக்குடும்பத்திற்கு ஒரு தனி இனிமை இருந்தது. அவர்கள் வாழ்க்கை வெறும் விளையாட்டு. எப்போதும் களிப்பும் குதூகலமும்தான்!

ஒரு நாள் அவள் வெட்கத்துடன் அவன் காதில் ஏதோ ரகசியம் சொன்னுள்.

இருவரும் குலுங்கிச் சிரித்தனர்.

என்றும் போல அன்றும் அவன் வேலைக்குப் போய் விட்டுத் திரும்பி வந்தபோது அவளை வாசலில் காணவில்லை. மனச்சஞ்சலத்துடன் அவன் உள்ளே நுழைந்தான். ஒரு நார்க்கட்டிலில் அவள் படுத்திருந்தாள். அவன் ஒரு முழு முட்டாளைப் போல 'என்ன' 'ஏன்' என்றெல்லாம் கலக்கத்தோடு கேட்டான். அது வரை அவன் கேட்டறியாத ஒரு புதுக் கீச்சுக்குரல் எலிக்குஞ்சின் கத்தலைப் போல வீறிட்டுக் கேட்டது. அவள் பக்கத்தில் கிடந்த ஒரு துணிச்சுருள் அசைந்தது. பரமு திடுக்கிட்டான்.

கௌரியம்மாள் குலுங்கச் சிரித்தாள், முதன் முதலாக அன்று அவளுடன் சேர்ந்து சிரிக்க அவனுக்கு இயலவில்லை. ஏனே! எதனுலோ! தெரியவில்லை.

குழந்தை கண்களைத் திறந்தது. அக்கண்களுக்குள் ஒரு நீல வர்ணம். அதன் ஆழத்தில் அவன் ஊடுருவிப் பார்த்தான். அது கை கால்களை ஆட்டி ஆட்டி அழுதது. உடனேயே பரமு வெளியே இறங்கி நடந்தான்.

ஒரு நாள் அவன் குழந்தையை எடுத்துக் கொண்டு அவனிடம் வந்தாள்.

" இங்கே பார்த்தீங்களா ?",

அவளுடைய அதரங்கள் இத்தனை மனோரம்மியமாக ஒரு போதும் முறுவலித்ததில்லை.

"எங்கே இவனை எடுங்கள் பார்க்கலாம்." அவன் ஒரு யந்திரத்தைப் போல் கைநீட்டி அவனை எடுத்தான். ஆனுல் அவன் கைகள் ஏனே நடுங்கிக் கொண்டிருந்தன. அவனைக் கீழே போட்டு விடுவோமோ என்று அஞ்சினுன். அவ்வச்சத்தைக் கண்டால் யாரும் சிரித்து விடுவார்கள். கௌரி குழந்தையைத் திரும்பப் பெற்ருள்.

பரமு எப்போதும்ஏதையோ நினைத்துக் கொண்டிருப்பான். குழந்தை விளையாடிக் கொண்டிருக்கும்போது நீங்கி நின்று கவனிப்பான். அவன் என்னதான் சிந்தனை செய்து கொண்டிருக்கிருனே! குழந்தையுடைய சின்னஞ்சிறு நீல விழிகள் பொருள் தெரியாத ஒரு கனவாக இருந்தது அவனுக்கு. அவன் அது வேண்டும் இது வேண்டும் என்றெல்லாம் மௌனமொழியில் கேட்கிருன்; கட்டளையிடுகிருன். என்னவெல்லாமோ செய்யவேண்டியிருக்கிறது, செய்துதான் ஆக வேண்டும் என்பதாகப் பரமுவிற்கு ஒரு பிரமை தட்டியது.

காரணம் தெரியாத ஓர் கலக்கம் பரமுவை சதா அலட்டிக் கொண்டிருந்தது. மாலையில் திராட்சையோ கற்கண்டோ அவன் வாங்கி வருவான். குழந்தை ஒரு கற்கண்டுத் துண்டை வாயில் போட்டு நாக்கை சப்புக் கொட்டி இனிப்பை அனுபவிக்கும்போது அவன் உள்ளக் குளிர்ச்சி அடைவான். அம்மா அவனுக்கு பால் கொடுக்கிருள். பரமு அதைப் பார்த்துப் பொருமைப் பட்டான். சிறுவன் தன் செந்நிற உதடுகளை விரித்துப் புன்முறுவல் செய்தவாறு மதுரமாக 'ப்பா!' என்று ஒலித்தான். அப்போது பிறக்கும் அவ்வின்ப உணர்ச்சி அவனைப் பொறுத்த வரையில் புதுமையானது. அவனை வாரியெடுத்து மார்புடன் சேர்த்துப் பரமு அவன் காதில் உரைத்தான்:—

"என் பிள்ளையை நான் ஒரு டாக்டர் ஆக்குவேன்"

அவ்வாக்குறுதி பரமுவின் சித்தத்திற்கோர் சாந்தியைக் கொடுத்தது. ஆனுல் இன்னெரு கேள்விக் குறி அவனுக்கு நேராகத் திரும்பியது. பணம்?

பரமு நினைவு அலைகளைக் கொண்டு பணம் உண்டு பண்ணினுன். ஐந்து ரூபாய், ஐந்நூறு ஆயிற்று, ஆயிரமாயிற்று, ஐயாயிரமாயிற்று......மைந்தன் டாக்டர் ஆனுன், அவன் டாக்டருடைய அப்பாவுமானுன். அக்கனவுக்குள் அலாதியான ஒரு சுகம் இருக்கத்தான் இருந்தது.

* * *

மகனை எடுத்து மடியில் வைத்தவாறு கௌரி சொன்னுள் :

"என் புள்ளைக்கு ஒரு தங்கச்சி வேணும்?"

ஒரு புதுக் கேள்விக் குறி! ஆறு மாதம் கழிந்தபின்னர் ஒருநாள் சின்னச் சிசுவொன்றின் குளிர் நடுக்கம் கலந்த அழுகை அங்கு கேட்டது. ஒரு பெண், பெண் குழந்தையொன்றைக் கையிலேந்தியபடி வெளியில் வந்தாள். அது ஏதோ தன்னிடம் கேட்பது போன்ற ஓர் பிரமை.

"எனக்கு என்ன செய்யப் போறே?"

ஒரு பெண்ணுக்கு அவசியமான கல்வி அவளுக்கு அளிக்க வேண்டும்; ஒரு மாப்பிள்ளையைத் தேடிப் பிடிக்க வேண்டும். மகளை எடுத்து மடியில் வைத்துவிட்டு அவன் சொன்னுன்.

"ஆமா, அவ்வளவுதான் என்னுல் முடியும்!"

அக்குழவி வாய் திறந்து சிரித்தது.

* * *

சிசு பிறந்து ஆறு மாதங்கள் தான் நீங்கின. கௌரி மூன்ருவதாகவும் கர்ப்பம் தரித்தாள். மூத்த பையன் குட்டப்பனுக்கு ஒரு தம்பியும் வேண்டாமா, என்று பரமு ஆறுதல் அடைந்தான்.

அது ஆண் குழந்தைதான். பதில் இல்லாத இன்னெரு கேள்விக் குறி! பரமு அவனை எடுக்கவில்லை; கொஞ்சவில்லை. அவன் கேட்கும் கேள்விக்கு என்ன விடை கூறுவது?

ஐந்து, ஆறு, ஏழு எட்டு வருடங்கள் போய்க்கொண்டிருந்தன. அங்கு இப்போது ஆறு குழந்தைகள் இருக்கிருர்கள். ஏழாவதாக கௌரி கர்ப்பிணி.

அங்கு சாந்தியில்லை, சமாதானமில்லை. எப்போதும் உதையும் கத்தலும், ஏச்சும் பேச்சும்தான். என்ன இருந்தாலும் போதாது. பசித்துத் துடி துடித்து அழும் குழந்தைகள், கோபத்திஞல் கடிந்து கொள்கிற அம்மா, எல்லாவற்றையும் வளர்க்க மாடு போல உழைக்கும் தந்தை— இதுதான் இப்போது அந்தக் குடும்பத்தின் குணுதிசயம்! அவர்கள் எல்லோருக்கும் பரஸ்பரம் கேட்க சிற்சில கேள்விகள் இருந்தன. யாரும் தங்களுக்குள் புரிந்து கொள்ளவும் இல்லை.

தகப்பன் வேறுவழி யில்லாது தாயிடம் கேட்பான்: "நான் என்னதான் செய்வேன் ?"

அவள் அடக்க முடியாத ஆத்திரத்துடன் அலறுவாள். "என்ன செய்வேன்னு?"

தன்னுடைய ஒரு பார்வையினுலே அவனை எதிர்த்து விடுவாள் அவள். அவள் அப்படியே கோபமடைவதற்கும் காரணம் இல்லாமல் இல்லை, அவள் தன்னைத்தானே வெறுத்தாள்.

அப்போது அக்கணவனும் மனைவியும் இன்னெரு கேள்விக்கு விடை சொல்லியாக வேண்டும். வெகு கூர்மையான ஒரு கேள்வி, வயிறு ஒட்டித் தேய்ந்துபோனஅந்தக்குழந்தைகளின் உயிரில்லாக் கண்களில் ஒளிந்திருக்கும்.

"எங்களை ஏன் இந்த உலகத்தில் இழுத்துப்போட்டீங்க?" என்ற ஒரு கேள்வி.

ஒரு நாள் மனைவியிடம் கணவன் கேட்டான், "நமக்கெதுக்கு இத்தனை புள்ளைங்க?"

"வேண்டாமென்ருல், இருக்கிறதை என்னத்தைச் செய்ய?" குழப்பம்....அவளுக்கொன்றும் பிடிபடவில்லை. அவன் மேலே சொன்னுன்.

"ஒண்ணு போதும். ரண்டுண்ணுக்கூட கூடுதல். சே; சே!"

"அப்படிண்ணு எல்லாத்தையும் கொண்ணுடலாமா?" கோபத்துடன் கேட்டாள் அவள்." இதுகளில் நாலு செத்துப் போச்சுன்னு?" அவள் ஆத்திரத்திஞல் அலறினுள்.

"துரோகி!"

அவள் வேறு எதையெல்லாமோ சொல்லி ஏசினுள். அவன் வெளியில் இறங்கினுன்.

சில வருடங்களும் ஆகிவிட்டன, மொத்தம் பன்னிரண்டு குழந்தைகள். பரமுவிற்கு எல்லாவற்றினுடையவும் பெயர்கள் கூடத் தெரியாது; சில சமயங்களில் பார்த்தால் அடையாளமும் தெரியாது. சில அவுன்ஸ் சாராயம் உள்ளே போகும்போது அவன் பெரும் குரலில் கேட்பான்,

"இதுகள் எல்லாம் பிழைக்குமா ?"

* * *

மூச்சு தடைப்பட்டதனுல் எழும்பும் வேதனை ஓசையைத் தவிர அங்கு வேறு ஒலியில்லை. ஒரு சிறு மண்ணெண்ணெய் விளக்கின் மங்கின ஒளிப்பரப்பில் அவள் கிடந்து மூச்சுவிட அவஸ்தைப் படுவதை அவன் அசைவின்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். குழந்தைகள் எல்லாம் தரையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தன.

அவள் மக்கள் பலரைப் பெற்ற மகராசி என்பதை அவன் தெரிந்துதான் இருந்தான். எத்தனை பேர்கள் என்று அவனுக்குச் சரியாகத் தெரியாது. குழந்தைகள் ஒவ்வொன்றையாகக் கூட்டிப் பார்த்தான். எண்ணிக்கை சரியாகவுமில்லை, ஒரு தடவை பதினுலு என்று கூட்டினுன். பிறகு அது பத்தாகி விட்டது. மனைவி—எதற்கு அவள்? நீண்ட சாலைவழி பிச்சை ஓட்டைத் தூக்கியபடி நடந்து செல்லும் பண்டாரம் எந்த நாட்டைச் சேர்ந்தவன்? ஒரு கிராமத்தை விட்டபின் வெகுதூரம் சென்ற பிறகுதான் இன்னெரு வீட்டைப் பார்க்க முடியும். அவனும் வாழ்கிருன்.

பார்த்துப் பார்த்திருந்து விட்டு அவன் சிறிது கண்

❊ தொடர்ச்சி 4-ம் பக்கம்

## நாடகத்தில் புதிய....

❊ 2-ம் பக்கத் தொடர்ச்சி

இன்று 'தமிழே; எமது உயிருக்கு நிகரே!'—என்று தம்பட்டம் போட்டுத் திரிகின்றனர்!

1948-ம் ஆண்டு முதலாக திருச்சி மாவட்டத்திலே தமிழை' 'ஆட்சி மொழியாக இருக்கச் செய்தோம். என்ன செய்வது? அது தோல்வி பெற்றதே—என்று கூறி; தமிழுக்கே இழுக்கு தேடியவர்கள் இன்று தமிழே சரண்—என்றுத் தஞ்சமடைகின்றனர்!

வேடிக்கை; விநோதம்! இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற அதிசயம்!

அழகியின்பால் ஆவல் இருக்கும்; அவளை அடையத் திட்டமிருக்கும்; ஆனால் அவனே உயர்குடிப் பிறந்தவனயிருப்பான்; அவளோ ஆறடிக்கு அப்பால் ஒதுங்கிச் செல்ல வேண்டிய ஒய்யாரியாய் இருப்பாள்!

தனியிடத்திலே அவளைக் கண்டுவிட்டால் அவள் பால் உரிமையும், இனிமையும் பெருக்கெடுத்தோடப் பேசுவான்!

நான்கு பேர் மத்தியிலோ; அவள் பார்க்க முயன்றபோதெல்லாம் பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு பெரியவர்களுக்கு நல்ல பிள்ளைபோல் நடித்துக் கொள்வான், அந்தப் பேதையின் நெஞ்சைப் புண்ணக்கிப் போட்டு விட்டு!

இது போன்ற சூழ் நிலை தான் இப்போதும்!

ஆமாம்; தற்சமயம் வாக்காளர்கள் என்னும் வனிதாமணியைத் தனித்துச் சந்திக்க வேண்டிய தருணம், காமுகனும் காங்கிரசிற்கு!

எனவே பனியினும் குளிர்ந்த பாகு மொழிகளை உதிர்க்கின்றனர்; தமிழை ஆட்சி மொழியாக்குவதாக 'ஆவர்த்தம்' பாடுகின்றனர்!

ஆனால் இதற்கு முன் தினமோ அவர்கள்; வீட்டுக்குப் பெரியவர்களாம் வடநாட்டு சேட்டுகளோடு இருந்தனர்!

அப்போது அந்த ஆரணங்கு—ஆமாம்; வாக்காளர் என்ற நீலோத்பல மேனியாள் தமிழை ஆட்சிமொழி யாக்கு என்று ஜாடைகாட்டிக் கேட்டனள்,

ஆனால் அந்தக் கிராதகனே தெரிந்தும் அவளைத் தெரியாதவன் போல் இருந்து விட்டான்!

—ஆனால் இப்போது?

மசோதா நிறைவேற்றுகின்றனர்!

அதுவும் எப்படி?

உடனடியாக தமிழ் ஆட்சி மொழியாக அரியாசனம் ஏருதாம்!

தாலுக்கா ஆபீஸ் போன்ற அலுவலகங்கள் புகுந்த பின்னரே அது மற்ற துறைகளில் அமுலாக்கப்படுமாம்.

ஏன்; எல்லாத் துறைகளிலும் இப்போதே தமிழைஆட்சி மொழியாக்கினல் என்ன வந்துவிடுமாம்? ஏன் அப்படி அவர்கள் தமிழன்னையின் பேரில் சந்தேகப்படுகின்றனர்?

—இவைகளுக்கெல்லாம் பதில் கூறத் தயங்குகிருர்கள்; தத்தளிக்கிருர்கள்!

சரி; அதுதான் போகட்டும்! தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டது!

சென்னை மாநிலத்தில் இனி தமிழ்தான் வழங்கும் என்ற நிலைமை உருவாகி விட்டது,

அவ்வாருனல் தமிழ் கூறும் நல்லுலக தமிழகம் என்றே தமிழ்நாடு என்று அழைப்பது தானே முறைமை?

தமிழ்ஆட்சிமொழி மசோதா நிறைவேற்றியவர்கள் சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்கு மறுப்பானேன்?

—சென்னை என்ற பெயரிலே தாங்கொணுச் சந்தோஷம் காணும் தேசியத் தோழர்கள் நாளை தேர்தல் களத்திலே பொது மக்களைச் சந்திக்கும் நேரத்தில் இதற்குச் சரியான பதில் கூறித்தான் ஆகவேண்டும்!

சென்னையைத் மிழ்நாடு என அழைப்பதைத் தள்ளிப் போடுவதற்கோ அல்லது தட்டிக் கழிப்பதற்கோதான் அவர்கள் தமிழை ஆட்சிமொழியாக்கிஞர்களென்ருல் தமிழ் மக்கள் அந்த சதித் திட்டத்தை விரும்பும் நிலையில் இல்லை என்பதைத் தான் இங்கு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிருேம்! ❊


கோவையில் தேர்தல் நிதி நாடகம்

கோவை ஷண்முகா தியேட்டரில்

3—1—57. வியாழன் இரவு 10-மணிக்கு

அறிஞர் அண்ணு, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன்

மற்றும் கழகத் தோழர்கள் நடிக்கும்

'சந்திரோதயம்'

கட்டணம் 10, 5, 3, 2. பெண்களுக்கு ரூ. 1-0-0

நாடக தினத்தன்று காலை முதல் தியேட்டரிலும் 27-ம் தேதி முதல் நகர கழகத்திலும் டிக்கட்டுகள் விற்கப்படும்.

நகர. தி. மு. க.


## அவர்களும் உணர்கிருர்கள்!

"சோஷலிஸ்ட் கட்சியின் தேசிய மகாநாடு இன்னும் ஒரு வாரத்தில் நடைபெறப்போகிறது. மகாநாடு விவாதிக்கப் போகிற பல பிரச்னைகளில் நிர்வாக மொழிப் பிரச்னையும் ஒன்ருகும்.

எல்லா அகில இந்திய கட்சிகளைப்போலே சோஷலிஸ்ட் கட்சியும் தனது அகில இந்தியத் தன்மையின் காரணமாக இந்தியே நாட்டின் நிர்வாக மொழியாக இருக்க வேண்டுமென்று கூறிவருகிறது. சோஷலிஸ்ட் கட்சியின் சட்டதிட்டங்கள், கொள்கை, அறிக்கை ஆகிய எதிலும் இந்தி சம்பந்தப்பட்ட அறிவிப்புகள் எதுவும் இல்லை. ஆனலும் கட்சியின் முக்கிய தலைவர்கள் இந்திதான் அரசியல் மொழி என்று பேச தொடங்கிவிட்டனர்.

தமிழ் மக்களின் பழமையான கலாசாரம், மொழிப் பற்று இரண்டையும் பாதிக்கின்ற எந்த செயலையும் தமிழ் மக்கள் எதிர்த்தே தீருவார்கள், வடநாட்டு மொழி ஒன்று தென்பகுதி மக்களுடைய கலாசாரத்திற்கு ஊறு செய்வதாகும். என்ற பீதி தமிழ்நாட்டில் வேர் ஊன்றிவிட்டது.

ஆங்கிலம் முதலாளித்வத்தின் மொழியெனவும், இந்தி உழைக்கும் வர்க்கத்தின் மொழியெனவும் ஒரு புதுவாதம் முற்போக்கு எண்ணம் படைத்தவர்களால் கிளப்பப்பட்டிருக்கிறது. 10 சதவிகிதத்திற்கும் குறைவாகப் படித்த மக்களைக்கொண்ட உ. பி, போன்ற இந்தி பேசும் மக்களின் நிலையை பொறுத்தவரை மேற்கண்ட வாதம் நியாயமானதாகத் தோன்றலாம். இந்திபேசும் மக்களுக்கு ஆங்கிலம் முதலாளித்வ மொழி என்பதை வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும் இந்திபேசாத மக்களுக்கு இந்தி முதலாளித்வ மொழிதான் என்பதும் நிலை பெற்று வருகிறது.

எப்படியோ இந்திமொழி பற்றிய பீதியைப் போக்க வேண்டும். கிளிப்பிள்ளைபோல தேசியம் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. "தேசிய நலன்" என்பதன் பெயரால் 'பிரதேசவாரி" மக்களின் நலன்கள் அலட்சியப்படுத்தப்பட்டு வந்ததை கடந்த 10 ஆண்டுகளில். பார்த்தோம். தேசம் என்பதே வடக்கே இருக்கும் நிலப் பகுதிதான் என்று இந்திபேசும் மக்கள் நினைக்கிருர்களோ என்ற சந்தேகம் தென்னுட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது..

தமிழ்நாட்டில் அகில இந்திய கட்சியின் கிளை என்பது இந்தி பேசும் மக்களின் எண்ணத்தைத் தெற்கே புகுத்தும் பணியினையே செய்து வந்திருக்கிறது. பொதுவாக எல்லாக் கட்சிகளின் சரித்திரமும் அவ்வளவுதான். தென்னுட்டு மக்களின் உண்மை எண்ணங்களை மகாநாட்டில் எடுத்துக் கூறுவதற்கான துணிவு சோஷலிஸ்ட் கட்சிக்கும் இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

—தோழர் எஸ். சின்னசாமியின் அறிக்கை.

## பிறைவானம்....

❊ 11-ம் பக்கத் தொடர்ச்சி

மூலையிலே முடங்கி விட்டிருந்தால் என்ன ஆகி யிருக்கும்? இரக்கப்பட்ட ஒரு சிலர் சில்லரை நாணயங்களை வீசிவிட்டுப் போயிருப்பர்; எச்சில் ரொட்டிகளைத் தந்திருப்பர்; "என்ன அசுத்தம் இது; இடைஞ்சல் செய்துகொண்டு!" என்று காறி உமிழ்ந்து, நடைபாதை போன்ற பொது இடத்திலும் அவளை வசிக்க விடாது ஓட ஓட விரட்டி யிருப்பர்; பிறகு என்ருவது ஒரு நாள் நடை பாதையிலே இறந்த பிணம் ஒன்றை நகர சுத்தித் தொழிலாளர்கள் அடக்கம் செய்த செலவு—என்ற செய்தி நகரசபைக் கணக்கேட்டில் பதிவாகி யிருக்கும் — அப்படி பரிதாபமாக முடிந்திருக்கும் சாராவின் வாழ்க்கை!

நாம் பார்த்த தில்லையா—கேள்விப்பட்ட தில்லையா—இப்படிப்பட்ட அனுதைச் சிறுவர் சிறுமியரின் அவல வாழ்க்கையை! ஆனல் சாரா மட்டும் அந்த பயங்கர நியதியிலிருந்து எப்படித் தப்பினுள்?

ஆனல் சாரா போராடினுள்; தன்னை வாழ விடாது தடை செய்த இயற்கையை – கரங்களைப் பறித்துக் கொண்ட தன்மையை எதிர்த்துப் போராடினுள்; அதற்கு அவள் பெற்றிருந்த ஆயுதம் "முயற்சி" தான்! சாரா முயற்சித்தாள்; 'திருவினை' அடையப்பெற்ருள்; இல்லையேல் 'இன்மை' அல்லவோ அவளைச் சூழ்ந்து விட்டிருக்கும்! அந்த ஈடு இணையற்ற முயற்சிதான் சாராவை உலகப் புகழ்பெற்ற ஓவியக் காரியாகக் காட்டுகிறது; மற்றவர்களுக்கும் நல்லதொரு பாடத்தைப் புகட்டுகிறது "முயற்சி முழுப் பயனைத் தரும்" என்று!

அகிலமனைத்துக்கும் பொதுவான கருத்து தரும் வள்ளுவரின் குறளும் அதைத்தான் சொல்லுகிறது!

# முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.

—"இந்தக் குறளுக்கு என்ன அண்ணா. பொருள்?" என்று கேட்டுக் கொண்டு வந்தது தங்கை! அண்ணனிடம் கதை கேட்க வேண்டுமென்றால்தானே தங்கைக்கு சந்தேகமே வரும்! அண்ணா இம்முறை கதையல்ல; உண்மையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை—முயற்சியால் 'திருவினை' பெற்ற ஒரு இங்கிலாந்து நாட்டுத் தங்கையின் வாழ்க்கைக் கதையை—வெற்றி வரலாற்றைச் சொன்னார்:

# உண்மைக் கதை

பாவம், அந்தச் சிறுமியைக் கண்டு எல்லோரும் பரிதாபப் பட்டார்கள். "அடடா" என்று அனுதாபப்பட்டார்கள். ஒரு சிலர் கண்ணீர் விடவும் செய்தார்கள். ஏன்? அவளுக்கு அம்மா இல்லையா? அப்பா இல்லையா? இருவரும் இல்லைதான். ஆனால்......அதை விட மிகப் பெரிய பயங்கரம்—பெரிய சோகம் — சொல்லட்டுமா?......அவளுக்கு இரண்டு கைகளுமே இல்லை. அப்பப்பா! நினைக்கவே பயமாக இருக்கிறதல்லவா? இரண்டு கைகள் இருக்கும்போதே — செய்ய வேண்டிய கடமைகள் எவ்வளவோ இருக்கின்றனவே, 'பிர்மா'வுக்கு நான்குகைகளாம், ஆறுமுகக் 'கடவுளு'க்குப் பன்னிரண்டு கைகளாம்—வேலையில்லாத அவர்களுக்கு இருந்ததாகச் சொல்லப்படும் அத்தனை கைகள் நமக்கு இருக்கக் கூடாதா—என்று நம்மிடையே எத்தனையோ பேர் வருந்துகிறார்கள். ஆனால், அப்பாவைப் பிரிந்து-அம்மாவைப் பிரிந்து இரண்டு கைகளையும் இழந்து—நடுத்தெருவிலே நின்றுகொண்டிருந்த அந்தச் சிசுவைப் பார்த்து எல்லோருமே துக்கப் பட்டார்கள். அது சிந்திய கண்ணீரைத்துடைக்க யாருமே முன் வரவில்லை!

இப்படி அனாதையாகத் தடுமாறிய பெண்தான் ஒரு நாள் உலகம் புகழும் மேதையானாள், பெரிய சித்திரக்காரியானாள்—என்று சொன்னால் நம்புவதற்குத் தயக்கமாக இருக்கிறதல்லவா? "பொய்! பொய்! சுத்தப் பொய்!" என்றும் சிலர் சொல்லுவார்கள். ஆனால்... அது உண்மைதான். அந்தச் சிறுமியின் கதை அப்படித்தான் இருக்கிறது. அவளை முன்னுக்குக் கொண்டுவந்த முயற்சியும் அதைத்தான் உலகத்துக்குச்சொல்லுகிறது. படியுங்கள்:

நடுத்தெரு வழியே தடுமாறி நடந்து கொண்டிருந்த அந்த சாராவை (அதுதான் அவளது பெயர்) ஒரு நாள் ஒரு சர்க்கஸ்காரன் பார்த்தான். ரொம்பவும் பரிதாபப்பட்டான். அந்தப் பெண்ணை எப்படியும் ஆதரிக்க வேண்டும் என்று முடிவு செய்தான். உடனே தன்னுடன் சர்க்கஸ் கம்பெனிக்கு அழைத்துச்சென்று விட்டான். ஆதரவுக்கு இடம் தேடிக் கொண்டிருந்த சாராவுக்கு ஒரே உற்சாகம். அவன் சொல்லித் தந்த வேலைகளை 'கபகப' வென்று கற்றுக் கொண்டாள். மூன்று மாதத்தில் அவளும் சர்க்கஸ் மேடையில் தோன்றிவிட்டாள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! கொடிய மிருகங்களையும் பழக்கி விடலாம்; ஆமைபோல் அடங்கி நடக்க வைத்து விடலாம்; ஆனால் கையற்ற சிறு பெண் பந்துபோல் உடல் வளைத்து—பயங்கரமான வித்தைகள் செய்தாள் என்பதை நம்பவா முடிகிறது? ஆனாலும் மறுக்க முடியாத உண்மை இது.

கைகள் இல்லாமல் வெறும் கால்களின் உதவியினாலேயே அவள் செய்யும் வித்தைகளைக் கண்டு ஊரே வியந்தது.

அந்த அதிசயத்தைக் கேள்விப்பட்டாள் ஒரு பணக்காரி. உடனே பார்த்துவிட எண்ணினாள். அன்றே சர்க்கசுக்கும் சென்றாள். அந்தப் பெண்ணின் திறமையைப் பார்த்து திகைத்தேவிட்டாள். அதே சமயம் அந்தப் பெண்ணின் மேல் இரக்கம்தோன்றியது. "பாவம், என்றைக்கு இருந்தாலும் இந்தப் பெண்ணுக்கு ஆபத்து ஏற்படத்தான் செய்யும்கொஞ்சம் தவறினாலும், உயிருக்கே அபாயமல்லவா? அவளை நான் கொண்டுபோய் வளர்த்தால் என்ன?" என்று எண்ணினாள். உடனே அந்த சர்க்கஸ்காரனிடம் சென்று தனது ஆவலை வெளியிட்டாள். அவனும்'சரி' என்றான். அன்றே சாரா சீமாட்டியின் வீட்டுக்கு வந்து விட்டாள்.

மகள் இல்லா குறை சீமாட்டிக்கு; மாதா இல்லாத குறை சாராவுக்கு! அந்த இரு குறைகளும் நிவர்த்தியாகி விட்டது!

சீமாட்டிக்கு அவள்மேல் எல்லையில்லா பிரியம். அவள் கேட்டதையெல்லாம் செய்து தருவாள். அவள் உதடு அசைந்தால் போதும்; சீமாட்டியின் கைகள் அதை வாங்கித் தந்துவிடும்.

இப்படி இருக்கும் போதுதான் சாரா ஒருநாள் தனது வளர்ப்புத் தாயிடம் தன் ஆசையைச் சொன்னாள். அது என்ன ஆசை தெரியுமா? நினைத்தால் 'ஐயோ, பாவம்!' என்போம்; 'வேண்டாத ஆசை; விபரீத எண்ணம்'—என்று கேலி கலந்த விமர்சனம் செய்வோம்! அவள் விரும்பியது ஓவியம் எழுதிப் பழக. கைகள் இல்லாதவள் இந்த ஆசைப்படலாமா—என சிரிக்கத் தோன்றுகிறதல்லவா? ஆனால் அந்த சீமாட்டி சிரிக்கவில்லை; சாராவின் ஆசையைக் கெடுக்கவும் இல்லை. அன்றே அவள் ஓவியம் கற்க ஏற்பாடு செய்தாள்.

பெரிய ஓவியர் ஒருவரின் வீட்டுக்கு அழைத்துச் செல்லப் பட்டாள் சாரா. ஓவியருக்குப் பக்கத்திலேயே இருந்து கவனித்தாள். கூர்ந்து கவனித்தாள். கொஞ்சம் கொஞ்சமாகப் பழகினாள். "கைகள் தான் இல்லையே, எப்படி?" என்கிறீர்களா? பற்களால்! ஆமாம்; பற்களால்தான் அந்தப் பெண் 'பிரஷை'ப் பிடித்தாள்; ஓவியம் எழுதினாள்; ஆனால்......அவள் முதலில் எழுதிய ஓவியங்கள் எல்லாம் ஒரே ஆபாசமாக இருந்தன. அதைப் பார்த்த சாராவே வெட்கப்படுவாள். கிழித்து குப்பைத் தொட்டியில் போட்டு விடுவாள். ஆனால் முயற்சியை இழக்கவில்லை. எழுதினாள்; எழுதிக் கொண்டேயிருந்தாள்; பற்கள் சோர்ந்து போகும் வரை எழுதிக் கொண்டே இருந்தாள்.

அந்த முயற்சிதான்—சோராத உழைப்புதான்—முதல் முதலாகவே அவளுக்கு ஒரு பெரிய பரிசைத் தேடிக் கொடுத்தது. லண்டனில் ஒரு பெரிய சித்திரப் போட்டி நடைபெற்றது. பிரபலமான பல ஓவியர்கள் அதில் கலந்துகொண்டார்கள். ஆயிரக் கணக்கான ஓவியங்கள் குவிந்தன. அவைகளுக்கு மத்தியில் சாராவின் ஓவியம் ஒன்றும் இருந்தது. அந்த ஓவியம் தான் அவளுக்கு போட்டிப் பரிசையும் தந்தது. தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றபோது அவள் அழுதாளாம். அதைப் பார்த்த அவளது வளர்ப்புத் தாய், 'பரிசு பெற்றிருக்கும்போது ஏன் அழுகிறாய்?" என்று கேட்டாளாம்

"என் முயற்சியின் பலனைத். தொட்டு மகிழ்வதற்கு என்னிடம் கைகள் இல்லையே!" என்று கூறி மீண்டும் அழுதாளாம்.

அந்தப் பரிசுக்குப் பிறகு அவளுக்கு மீண்டும் அநேக பரிசுகள் கிடைத்தன. புகழ் மாலைகள் குவிந்தன. இங்கிலாந்திலேயே அவள் மிகப் பெரிய ஓவியக்காரியானாள். இப்போது லண்டன் நகரத்து அரண்மனையை அலங்கரிக்கும் அநேக சித்திரங்கள் அவள் எழுதியவை தானாம்.

அவளது சித்திரங்கள் ஒவ்வொன்றும் உலக நீதிகளையும் உண்மைகளையும் விளக்குகின்றனவாம்.

ஓவியங்கள் மட்டுமென்ன; சாராவின் வாழ்க்கையே ஒரு மறுக்க முடியாத உண்மையைத்தான் சொல்லுகிறது.

கையில்லாத சாரா "ஐயோ, நான் என்ன செய்வேன் இனிமேல்?" என்று மனம் குமுறி

✻ 10-ம் பக்கம் பார்க்க

## ஆவலுக்குத் 'தண்டனை'!

● ஆசை பொல்லாதது என்பார்கள்: அந்தப் பையன் விஷயத்தில் அது என்னவோ 'நூற்றுக்கு நூறு' உண்மையாகி விட்டது. அந்தப் பொல்லாத ஆசை அவனுக்கு அடி—கடி—உதை—இத்தனையும் வாங்கித் தந்து "ஓ" வென்று அழவும் வைத்து விட்டதே!

● நாடகங்கள் பிறந்த காலம் அது! வேடமணிந்த நடிகர்களின் நடிப்பை—உரையாடலை—காட்சி அமைப்புகளை ஏதோ 'மாய உலகம்' என்று மக்கள் நம்பி மயங்கிக் கிடந்த சமயம்!



அந்தப் பையனுக்கும் ஆசை தானும் நாடகம் பார்க்க வேண்டுமென்று. ஆனால் சந்தர்ப்பத்தின் விளைவு, அந்த ஆசை ஏற்பட்ட நேரத்தில் அவனிடம் பணமில்லை. பள்ளி நண்பனிடம் 'கடன்' வாங்கினான்: நாடகமும் பார்த்தான்: பரவசப்பட்டான்.

● நண்பன் பலமுறை கேட்டான்: பயனில்லை: கடைசியில் சரியான தண்டனையும் தந்து விட்டான். தனியிடத்தில் சிக்கிய அச்சிறுவனை அடித்தான்; உதைத்தான்: அழுமளவுக்கு 'தண்டனை' தந்துவிட்டுப் போய் விட்டான்!

● இப்படி ஆசையால் அடிபட்ட சிறுவன் யார் தெரியுமா? ரஷ்ய நாட்டு இலக்கிய வானில் ஒளிகுன்றா தாரகைகளில் ஒன்றாக பின்னால் ஒளிவிட்ட கோகோல் என்பார்தான்!

## நாடகத்தில் புதிய....

※ 2-ம் பக்கத் தொடர்ச்சி

இன்று 'தமிழே; எமது உயிருக்கு நிகரே!'—என்று தம்பட்டம் போட்டுத் திரிகின்றனர்!

1948-ம் ஆண்டு முதலாக திருச்சி மாவட்டத்திலே தமிழை 'ஆட்சி மொழியாக இருக்கச் செய்தோம். என்ன செய்வது? அது தோல்வி பெற்றதே—என்று கூறி; தமிழுக்கே இழுக்கு தேடியவர்கள் இன்று தமிழே சரண்—என்றுத் தஞ்சமடைகின்றனர்!

வேடிக்கை; விநோதம்! இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற அதிசயம்!

அழகியின்பால் ஆவல் இருக்கும்; அவளை அடையத் திட்டமிருக்கும்; ஆனால் அவனோ உயர்குடிப் பிறந்தவனாயிருப்பான்; அவளோ ஆறடிக்கு அப்பால் ஒதுங்கிச் செல்ல வேண்டிய ஒய்யாரியாய் இருப்பாள்!

தனியிடத்திலே அவளைக் கண்டுவிட்டால் அவள் பால் உரிமையும், இனிமையும் பெருக்கெடுத்தோடப் பேசுவான்!

நான்கு பேர் மத்தியிலோ; அவள் பார்க்க முயன்றபோதெல்லாம் பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு பெரியவர்களுக்கு நல்ல பிள்ளைபோல் நடித்துக் கொள்வான், அந்தப் பேதையின் நெஞ்சைப் புண்ணாக்கிப் போட்டு விட்டு!

இது போன்ற சூழ் நிலை தான் இப்போதும்!

ஆமாம்; தற்சமயம் வாக்காளர்கள் என்னும் வனிதாமணியைத் தனித்துச் சந்திக்க வேண்டிய தருணம், காமுகனும் காங்கிரசிற்கு!

எனவே பனியினும் குளிர்ந்த பாகு மொழிகளை உதிர்க்கின்றனர்; தமிழை ஆட்சி மொழியாக்குவதாக 'ஆவர்த்தம்' பாடுகின்றனர்!

ஆனால் இதற்கு முன் தினமோ அவர்கள்; வீட்டுக்குப் பெரியவர்களாம் வடநாட்டு சேட்டுகளோடு இருந்தனர்!

அப்போது அந்த ஆரணங்கு —ஆமாம்; வாக்காளர் என்ற நீலோத்பல மேனியாள் தமிழை ஆட்சிமொழி யாக்கு என்று ஜாடைகாட்டிக் கேட்டனள்,

ஆனால் அந்தக் கிராதகனோ தெரிந்தும் அவளைத் தெரியாதவன் போல் இருந்து விட்டான்!

—ஆனால் இப்போது?

மசோதா நிறைவேற்றுகின்றனர்!

அதுவும் எப்படி?

உடனடியாக தமிழ் ஆட்சி மொழியாக அறியாசனம் ஏறுதாம்!

தாலுக்கா ஆபீஸ் போன்ற அலுவலகங்கள் புகுந்த பின்னரே அது மற்ற துறைகளில் அமுலாக்கப்படுமாம்.

ஏன்; எல்லாத் துறைகளிலும் இப்போதே தமிழை ஆட்சி மொழியாக்கினால் என்ன வந்து விடுமாம்? ஏன் அப்படி அவர்கள் தமிழன்னையின் பேரில் சந்தேகப்படுகின்றனர்?

—இவைகளுக்கெல்லாம் பதில் கூறத் தயங்குகிறார்கள்; தத்தளிக்கிறார்கள்!

சரி; அதுதான் போகட்டும்! தமிழ் ஆட்சி மொழியாக்கப் பட்டது!

சென்னை மாநிலத்தில் இனி தமிழ்தான் வழங்கும் என்ற நிலைமை உருவாகி விட்டது,

அவ்வாறானால் தமிழ் கூறும் நல்லுலக தமிழகம் என்றோ தமிழ்நாடு என்று அழைப்பது தானே முறைமை?

தமிழ்ஆட்சிமொழி மசோதா நிறைவேற்றியவர்கள் சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்கு மறுப்பானேன்?

—சென்னை என்ற பெயரிலே தாங்கொணாச் சந்தோஷம் காணும் தேசியத் தோழர்கள் நாளை தேர்தல் களத்திலே பொது மக்களைச் சந்திக்கும் நேரத்தில் இதற்குச் சரியான பதில் கூறித்தான் ஆகவேண்டும்!

சென்னையைத் மிழ்நாடு என அழைப்பதைத் தள்ளிப் போடுவதற்கோ அல்லது தட்டிக் கழிப்பதற்கோதான் அவர்கள் தமிழை ஆட்சிமொழியாக்கினார்களென்றால் தமிழ் மக்கள் அந்த சதித் திட்டத்தை விரும்பும் நிலையில் இல்லை என்பதைத் தான் இங்கு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறோம்! ※

## அவர்களும் உணர்கிறார்கள்!

"சோஷலிஸ்ட் கட்சியின் தேசிய மகாநாடு இன்னும் ஒரு வாரத்தில் நடைபெறப்போகிறது. மகாநாடு விவாதிக்கப் போகிற பல பிரச்னைகளில் நிர்வாக மொழிப் பிரச்னையும் ஒன்றாகும்.

எல்லா அகில இந்திய கட்சிகளைப்போலே சோஷலிஸ்ட் கட்சியும் தனது அகில இந்தியத் தன்மையின் காரணமாக இந்தியே நாட்டின் நிர்வாக மொழியாக இருக்க வேண்டுமென்று கூறிவருகிறது. சோஷலிஸ்ட் கட்சியின் சட்டதிட்டங்கள், கொள்கை, அறிக்கை ஆகிய எதிலும் இந்தி சம்பந்தப்பட்ட அறிவிப்புகள் எதுவும் இல்லை. ஆனாலும் கட்சியின் முக்கிய தலைவர்கள் இந்திதான் அரசியல் மொழி என்று பேச தொடங்கிவிட்டனர்.

தமிழ் மக்களின் பழமையான கலாசாரம், மொழிப் பற்று இரண்டையும் பாதிக்கின்ற எந்த செயலையும் தமிழ் மக்கள் எதிர்த்தே தீருவார்கள், வடநாட்டு மொழி ஒன்று தென்பகுதி மக்களுடைய கலாசாரத்திற்கு ஊறு செய்வதாகும். என்ற பீதி தமிழ்நாட்டில் வேர் ஊன்றிவிட்டது.

ஆங்கிலம் முதலாளித்வத்தின் மொழியெனவும், இந்தி உழைக்கும் வர்க்கத்தின் மொழியெனவும் ஒரு புதுவாதம் முற்போக்கு எண்ணம் படைத்தவர்களால் கிளப்பப்பட்டிருக்கிறது. 10 சதவிகிதத்திற்கும் குறைவாகப் படித்த மக்களைக்கொண்ட உ. பி, போன்ற இந்தி பேசும் மக்களின் நிலையை பொறுத்தவரை மேற்கண்ட வாதம் நியாயமானதாகத் தோன்றலாம். இந்திபேசும் மக்களுக்கு ஆங்கிலம் முதலாளித்வ மொழி என்பதை வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும் இந்திபேசாத மக்களுக்கு இந்தி முதலாளித்வ மொழிதான் என்பதும் நிலை பெற்று வருகிறது.

எப்படியோ இந்திமொழி பற்றிய பீதியைப் போக்க வேண்டும். கிளிப்பிள்ளைபோல தேசியம் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. "தேசிய நலன்" என்பதன் பெயரால் 'பிரதேசவாரி" மக்களின் நலன்கள் அலட்சியப்படுத்தப்பட்டு வந்ததை கடந்த 10 ஆண்டுகளில். பார்த்தோம். தேசம் என்பதே வடக்கே இருக்கும் நிலப் பகுதிதான் என்று இந்திபேசும் மக்கள் நினைக்கிறார்களோ என்ற சந்தேகம் தென்னாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது..

தமிழ்நாட்டில் அகில இந்திய கட்சியின் கிளை என்பது இந்தி பேசும் மக்களின் எண்ணத்தைத் தெற்கே புகுத்தும் பணியினையே செய்து வந்திருக்கிறது. பொதுவாக எல்லாக் கட்சிகளின் சரித்திரமும் அவ்வளவுதான். தென்னாட்டு மக்களின் உண்மை எண்ணங்களை மகாநாட்டில் எடுத்துக் கூறுவதற்கான துணிவு சோஷலிஸ்ட் கட்சிக்கும் இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

—தோழர் எஸ். சின்னசாமியின் அறிக்கை.

## பிறைவானம்....

※ 11-ம் பக்கத் தொடர்ச்சி

மூலையிலே முடங்கி விட்டிருந்தால் என்ன ஆகி யிருக்கும்? இரக்கப்பட்ட ஒரு சிலர் சில்லரை நாணயங்களை வீசிவிட்டுப் போயிருப்பர்; எச்சில் ரொட்டிகளைத் தந்திருப்பர்; "என்ன அசுத்தம் இது; இடைஞ்சல் செய்துகொண்டு!" என்று காறி உமிழ்ந்து, நடைபாதை போன்ற பொது இடத்திலும் அவளை வசிக்க விடாது ஓட ஓட விரட்டி யிருப்பர்; பிறகு என்றாவது ஒரு நாள் நடை பாதையிலே இறந்த பிணம் ஒன்றை நகர சுத்தித் தொழிலாளர்கள் அடக்கம் செய்த செலவு—என்ற செய்தி நகரசபைக் கணக்கேட்டில் பதிவாகி யிருக்கும் — அப்படி பரிதாபமாக முடிந்திருக்கும் சாராவின் வாழ்க்கை!

நாம் பார்த்த தில்லையா—கேள்விப்பட்ட தில்லையா—இப்படிப்பட்ட அனாதைச் சிறுவர் சிறுமியரின் அவல வாழ்க்கையை! ஆனால் சாரா மட்டும் அந்த பயங்கர நியதியிலிருந்து எப்படித் தப்பினாள்?

ஆனால் சாரா போராடினாள்; தன்னை வாழ விடாது தடை செய்த இயற்கையை – கரங்களைப் பறித்துக் கொண்ட தன்மையை எதிர்த்துப் போராடினாள்; அதற்கு அவள் பெற்றிருந்த ஆயுதம் "முயற்சி" தான்! சாரா முயற்சித்தாள்; 'திருவினை' அடையப்பெற்றாள்; இல்லையேல் 'இன்மை' அல்லவோ அவளைச் சூழ்ந்து விட்டிருக்கும்! அந்த ஈடு இணையற்ற முயற்சிதான் சாராவை உலகப் புகழ்பெற்ற ஓவியக் காரியாகக் காட்டுகிறது; மற்றவர்களுக்கும் நல்லதொரு பாடத்தைப் புகட்டுகிறது "முயற்சி முழுப் பயனைத் தரும்" என்று!

அகிலமனைத்துக்கும் பொதுவான கருத்து தரும் வள்ளுவரின் குறளும் அதைத்தான் சொல்லுகிறது!

கோவையில் தேர்தல் நிதி நாடகம்

கோவை ஷண்முகா தியேட்டரில்

3—1—57. வியாழன் இரவு 10-மணிக்கு

அறிஞர் அண்ணா, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன்

மற்றும் கழகத் தோழர்கள் நடிக்கும்

'சந்திரோதயம்'

கட்டணம் 10, 5, 3, 2. பெண்களுக்கு ரூ. 1-0-0

நாடக தினத்தன்று காலை முதல் தியேட்டரிலும் 27-ம் தேதி முதல் நகர கழகத்திலும் டிக்கட்டுகள் விற்கப்படும்.

நகர. தி. மு. க.

# முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.

—"இந்தக் குறளுக்கு என்ன அண்ணா, பொருள்?" என்று கேட்டுக் கொண்டு வந்தது தங்கை! அண்ணனிடம் கதை கேட்க வேண்டுமென்றால்தானே தங்கைக்கு சந்தேகமே வரும்! அண்ணா இம்முறை கதையல்ல; உண்மையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை—முயற்சியால் 'திருவினை' பெற்ற ஒரு இங்கிலாந்து நாட்டுத் தங்கையின் வாழ்க்கைக் கதையை—வெற்றி வரலாற்றைச் சொன்னார்:

# உண்மைக் கதை

பாவம், அந்தச் சிறுமியைக் கண்டு எல்லோரும் பரிதாபப் பட்டார்கள். "அடடா" என்று அனுதாபப்பட்டார்கள். ஒரு சிலர் கண்ணீர் விடவும் செய்தார்கள். ஏன்? அவளுக்கு அம்மா இல்லையா? அப்பா இல்லையா? இருவரும் இல்லைதான். ஆனால்......அதைவிட மிகப் பெரிய பயங்கரம்—பெரிய சோகம் — சொல்லட்டுமா?......அவளுக்கு இரண்டு கைகளுமே இல்லை. அப்பப்பா! நினைக்கவே பயமாக இருக்கிறதல்லவா? இரண்டு கைகள் இருக்கும்போதே — செய்ய வேண்டிய கடமைகள் எவ்வளவோ இருக்கின்றனவே. 'பிரமா'வுக்கு நான்குகைகளாம், ஆறுமுகக் 'கடவுளு'க்குப் பன்னிரண்டு கைகளாம்—வேலையில்லாத அவர்களுக்கு இருந்ததாகச் சொல்லப்படும் அத்தனை கைகள் நமக்கு இருக்கக் கூடாதா—என்று நம்மிடையே எத்தனையோ பேர் வருந்துகிறார்கள். ஆனால், அப்பாவைப் பிரிந்து-அம்மாவைப் பிரிந்து இரண்டு கைகளையும் இழந்து—நடுத்தெருவிலே நின்றுகொண்டிருந்த அந்தச் சிசுவைப் பார்த்து எல்லோருமே துக்கப் பட்டார்கள். அது சிந்திய கண்ணீரைத்துடைக்க யாருமே முன் வரவில்லை!

இப்படி அனாதையாகத் தடுமாறிய பெண்தான் ஒரு நாள் உலகம் புகழும் மேதையானாள், பெரிய சித்திரக்காரியானாள்—என்று சொன்னால் நம்புவதற்குத் தயக்கமாக இருக்கிறதல்லவா? "பொய்! பொய்! சுத்தப் பொய்!" என்றும் சிலர் சொல்லுவார்கள். ஆனால்... அது உண்மைதான். அந்தச் சிறுமியின் கதை அப்படித்தான் இருக்கிறது. அவளை முன்னுக்குக் கொண்டுவந்த முயற்சியும் அதைத்தான் உலகத்துக்குச்சொல்லுகிறது. படியுங்கள்:

நடுத்தெரு வழியே தடுமாறி நடந்து கொண்டிருந்த அந்த சாராவை (அதுதான் அவளது பெயர்) ஒரு நாள் ஒரு சர்க்கஸ்காரன் பார்த்தான். ரொம்பவும் பரிதாபப்பட்டான். அந்தப் பெண்ணை எப்படியும் ஆதரிக்க வேண்டும் என்று முடிவு செய்தான். உடனே தன்னுடன் சர்க்கஸ் கம்பெனிக்கு அழைத்துச்சென்று விட்டான். ஆதரவுக்கு இடம் தேடிக் கொண்டிருந்த சாராவுக்கு ஒரே உற்சாகம். அவன் சொல்லித் தந்த வேலைகளை 'கபகப' வென்று கற்றுக் கொண்டாள். மூன்று மாதத்தில் அவளும் சர்க்கஸ் மேடையில் தோன்றிவிட்டாள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! கொடிய மிருகங்களையும் பழக்கி விடலாம்; ஆமைபோல் அடங்கி நடக்க வைத்து விடலாம்; ஆனால் கையற்ற சிறு பெண் பந்துபோல் உடல் வளைத்து—பயங்கரமான வித்தைகள் செய்தாள் என்பதை நம்பவா முடிகிறது? ஆனாலும் மறுக்க முடியாத உண்மை இது.

கைகள் இல்லாமல் வெறும் கால்களின் உதவியினாலேயே அவள் செய்யும் வித்தைகளைக் கண்டு ஊரே வியந்தது.

அந்த அதிசயத்தைக் கேள்விப்பட்டாள் ஒரு பணக்காரி. உடனே பார்த்துவிட எண்ணினாள். அன்றே சர்க்கசுக்கும் சென்றாள். அந்தப் பெண்ணின் திறமையைப் பார்த்து திகைத்தேவிட்டாள். அந்த சமயம் அந்தப் பெண்ணின் மேல் இரக்கம் தோன்றியது. "பாவம், என்றைக்கு இருந்தாலும் இந்தப் பெண்ணுக்கு ஆபத்து ஏற்படத்தான் செய்யும் கொஞ்சம் தவறினாலும், உயிருக்கே அபாயமல்லவா? அவளை நான் கொண்டுபோய் வளர்த்தால் என்ன?" என்று எண்ணினாள். உடனே அந்த சர்க்கஸ்காரனிடம் சென்று தனது ஆவலை வெளியிட்டாள். அவனும் 'சரி' என்றான். அன்றே சாரா சீமாட்டியின் வீட்டுக்கு வந்து விட்டாள்.

மகள் இல்லா குறை சீமாட்டிக்கு; மாதா இல்லாத குறை சாராவுக்கு' அந்த இரு குறைகளும் நிவர்த்தியாகி விட்டது!

சீமாட்டிக்கு அவள்மேல் எல்லையில்லா பிரியம். அவள் கேட்டதையெல்லாம் செய்து தருவாள். அவள் உதடு அசைந்தால் போதும்; சீமாட்டியின் கைகள் அதை வாங்கித் தந்துவிடும்.

இப்படி இருக்கும் போதுதான் சாரா ஒரு நாள் தனது வளர்ப்புத் தாயிடம் தன் ஆசையைச் சொன்னாள். அது என்ன ஆசை தெரியுமா? நினைத்தால் 'ஐயோ, பாவம்!' என்போம்; 'வேண்டாத ஆசை; விபரீத எணணம்'—என்று கேலி கலந்த விமர்சனம் செய்வோம்! அவள் விரும்பியது ஓவியம் எழுதிப் பழக. கைகள் இல்லாதவள் இந்த ஆசைப்படலாமா—என சிரிக்கத் தோன்றுகிறதல்லவா? ஆனால் அந்த சீமாட்டி சிரிக்கவில்லை; சாராவின் ஆசையைக் கெடுக்கவும் இல்லை. அன்றே அவள் ஓவியம் கற்க ஏற்பாடு செய்தாள்.

பெரிய ஓவியர் ஒருவரின் வீட்டுக்கு அழைத்துச் செல்லப் பட்டாள் சாரா. ஓவியருக்குப் பக்கத்திலேயே இருந்து கவனித்தாள். கூர்ந்து கவனித்தாள். கொஞ்சம் கொஞ்சமாகப் பழகினாள். "கைகள் தான் இல்லையே, எப்படி?" என்கிறீர்களா? பற்களால்! ஆமாம்; பற்களால்தான் அந்தப் பெண் 'பிரஷை'ப் பிடித்தாள்; ஓவியம் எழுதினாள்; ஆனால்......அவள் முதலில் எழுதிய ஓவியங்கள் எல்லாம் ஒரே ஆபாசமாக இருந்தன. அதைப் பார்த்த சாராவே வெட்கப் படுவாள். கிழித்து குப்பைத் தொட்டியில் போட்டு விடுவாள். ஆனால் முயற்சியை இழக்கவில்லை. எழுதினாள்; எழுதிக் கொண்டேயிருந்தாள்; பற்கள் சோர்ந்து போகும் வரை எழுதிக் கொண்டே இருந்தாள்.

அந்த முயற்சிதான்—சோராத உழைப்புதான்—முதல் முதலாகவே அவளுக்கு ஒரு பெரிய பரிசைத் தேடிக் கொடுத்தது. லண்டனில் ஒரு பெரிய சித்திரப் போட்டி நடைபெற்றது. பிரபலமான பல ஓவியர்கள் அதில் கலந்துகொண்டார்கள். ஆயிரக் கணக்கான ஓவியங்கள் குவிந்தன. அவைகளுக்கு மத்தியில் சாராவின் ஓவியம் ஒன்றும் இருந்தது. அந்த ஓவியம் தான் அவளுக்கு போட்டிப் பரிசையும் தந்தது. தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றபோது அவள் அழுதாளாம். அதைப் பார்த்த அவளது வளர்ப்புத் தாய், 'பரிசு பெற்றிருக்கும்போது ஏன் அழுகிறாய்?" என்று கேட்டாளாம்

"என் முயற்சியின் பலனைத். தொட்டு மகிழ்வதற்கு என்னிடம் கைகள் இல்லையே!" என்று கூறி மீண்டும் அழுதாளாம்.

அந்தப் பரிசுக்குப் பிறகு அவளுக்கு மீண்டும் அநேக பரிசுகள் கிடைத்தன. புகழ் மாலைகள் குவிந்தன. இங்கிலாந்திலேயே அவள் மிகப் பெரிய ஓவியக்காரியானாள். இப்போது லண்டன் நகரத்து அரண்மனையை அலங்கரிக்கும் அநேக சித்திரங்கள் அவள் எழுதியவை தானும்.

அவளது சித்திரங்கள் ஒவ்வொன்றும் உலக நீதிகளையும் உண்மைகளையும் விளக்குகின்றனவாம்.

ஓவியங்கள் மட்டுமென்ன; சாராவின் வாழ்க்கையே ஒரு மறுக்க முடியாத உண்மையைத்தான் சொல்லுகிறது.

கையில்லாத சாரா "ஐயோ, நான் என்ன செய்வேன் இனிமேல்?" என்று மனம் குமுறி

❊ 10-ம் பக்கம் பார்க்க

## ஆவலுக்குத் 'தண்டனை'!

● ஆசை பொல்லாதது என்பார்கள்; அந்தப் பையன் விஷயத்தில் அது என்னவோ 'நூற்றுக்கு நூறு' உண்மையாகி விட்டது. அந்தப் பொல்லாத ஆசை அவனுக்கு அடி—கடி—உதை—இத்தனையும் வாங்கித் தந்து "ஓ" வென்று அழவும் வைத்து விட்டதே!

● நாடகங்கள் பிறந்த காலம் அது! வேடமணிந்த நடிகர்களின் நடிப்பை—உரையாடலை—காட்சி அமைப்புகளை ஏதோ 'மாய உலகம்' என்று மக்கள் நம்பி மயங்கிக் கிடந்த சமயம்!



அந்தப் பையனுக்கும் ஆசை தானும் நாடகம் பார்க்க வேண்டுமென்று. ஆனால் சந்தர்ப்பத்தின் விளைவு, அந்த ஆசை ஏற்பட்ட நேரத்தில் அவனிடம் பணமில்லை. பள்ளி நண்பனிடம் 'கடன்' வாங்கினான்: நாடகமும் பார்த்தான்: பரவசப்பட்டான்.

● நண்பன் பலமுறை கேட்டான்: பயனில்லை: கடைசியில் சரியான தண்டனையும் தந்து விட்டான். தனியிடத்தில் சிக்கிய அச்சிறுவனை அடித்தான்; உதைத்தான்: அழுமளவுக்கு 'தண்டனை' தந்துவிட்டுப் போய் விட்டான்!

● இப்படி ஆசையால் அடிபட்ட சிறுவன் யார் தெரியுமா? ரஷ்ய நாட்டு இலக்கிய வானில் ஒளிகுன்றா தாரகைகளில் ஒன்றாக பின்னால் ஒளிவிட்ட கோகேல் என்பார்தான்!

# கடைசிப் பக்கம்

## எழுத்தாணி

ஓ. லட்சுமண நாராயணன் ; சித்தூர்.

(?) உலகத்தில் உபயோகப் படாத பொருள் எது ?

எதுவுமில்லை ; காமராசரே இப்போது உபயோகப் படுகிறரே, காங்கிரசிற்கு !

(?) கலைக்கும் மனிதனுடைய வாழ்க்கைக்கும் தொடர்பு உண்டா ?

காங்கிரஸ் ஆட்சிக்கும் ஊழல் நிர்வாகத்திற்கும் உள்ள நீங்காத் தொடர்பு அவையிரண்டிற்கும் உண்டு, நண்பரே !

வி. பாப்பா ; வேலூர்.

(?) திராவிடர் கழகத்தின் தற்போதைய நோக்கம் என்ன ?

தி. மு. க. விற்குத் ' தீரா இடக் ' கொடுப்பது தான் !

வி. கோபால கிருஷ்ணன் ; தில்லை.

(?) காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரத்திற்கு மொரார்ஜி தேசாய் வந்திருந் தாராமே ?

அமாம் ; எடுத்த எடுப்பிலேயே 'அபசகுனம்'! மொரார்ஜி சென்ற தேர்தலில் தோற்றுப் போனவர் !

துரை. முருகேசன் ; காரமடை.

(?) பண்டித நேரு இன்னும் முப்பதாண்டுகளுக்குக் காங்கிரஸ் கட்சியே நீடிக்க வேண்டும் என்று கூறியதன் அர்த்தம் என்ன ?

இது புரிய வில்லையா ; இன்னும் முப்ப சாண்டுகளுக்குப் பிறது காங்கிரஸ் கட்சி தேவையில்லை என்று கூறியிருக்கிறர். நாம் காங்கிரசை ஒழிக்க அவசரப்—படுகிறேம் ; அவர் நிதானமாகச் செல்கிறர் — அவ்வளவு தான்!

வி. கலிய பெருமாள்: தஞ்சை.

(?) இந்தத் தேர்தல் நியாயமான முறையிலே நடைபெறுமா ?

எதிர்க் கட்சிகளுக்குச் சின்னம் கொடுங்க மறுப்பவர்களிடம் எப்படித் தோழரே நியாயத்தை எதிர்பார்க்க முடியும் ?

சுந்தர வதனம். புரசை.

(?) இந்திரா காந்தியார் தேர்தலுக்கு நிற்பாரா ?

நிற்கலாம் ; அவர்தான் அடுத்த சுகாதார மந்திரி யென்றும் பேசிக் கொள்கிறர்கள் !

## தேர்தல் காலத்தில் ....

*பெண்கள் அவசர அவசரமாகப் புறப்பட்டு ஓட்டுப்போட வண்டிகளில் ஏறும்போது யாராவது அருகில் நின்று கொண்டு. 'யாருக்கு ஓட்டுப் போடுவீர்கள் ?' என்று கேட்டால், அவர்கள் யாராவது ஒருவருக்கு ஏதாவது ஒரு பெட்டியில் போட்டு வருகிறேன்; அடுப்பில் குழம்பு வைத்திருக்கிறேன் கொஞ்சம் பார்த்துக் கொள் என்று சொல்வார்கள்.*

*ஆனல் வீட்டில் குழம்பு கொதிப்பது எவ்வளவு முக்கியமோ அதுபோல் 5 வருட காலத்திற்கு நமது குடும்பியும் வாழ வேண்டும். இதைத் தாய்மார்கள் இந்தத் தேர்தலில் உணர வேண்டுகிறேன்.*

*—அறிஞர் அண்ணு*


இணையற்ற நாடகம்

ஒப்பற்ற நூல் வடிவில்

விலை

ரூபாய் 1—8—0




முத்துவேல் பதிப்பகம்
77, மதுரை ரோடு,
— திருச்சி. —

# முத்தமிழ் முழங்கும்

# 'முரசொலி' பொங்கல் மலர்!

அறிஞர் அண்ணுவின்

பொன்ளேவியத்துடன் துவங்கும் !

★

நாவலர் நெடுஞ்செழியன்

"நாட்டுக்கு ஒரு சேதி" சொல்லுகிறா!

★

★ நாடகம்

★ நீண்ட கட்டுரை

★ சிறு கதை

★ கவிதை நடைச் சொல்லோவியம்

இத்தனையும் கருணநிதி எழுதுகிறர் !

★

## பொங்கலுக்கு ஒரு தனிச்சுவை !
## உங்களுக்கு ஒரு நல் விருந்து !

## 'முரசொலி' வழங்கும் மலர்

★ நெஞ்சையள்ளும் மூவர்ண முகப்பு !

★ உள்ளே; நிலாமேருகுடன் திகழும் பலவர்ண ஓவியங்கள் !

—இவைகளை யெல்லாம் மிஞ்சும் எழுத்துலக வேந்தர்களின் கருத்தோவியங்கள் !

★ உள்ளம் தொடும் சிறுகதைகள் !

★ உவகை கேலிச்தரும் சித்திரங்கள் !

★ நாட்டு விடுதலைக்கு ஊக்குவிச்கும் கட்டுரைகள் !

★ காட்டு தர்பார் நடத்தும் கயவர்களை காட்டித்சரும் 'காாட்டூன்'கள் !

இவ்வாறு; பக்கத்திற்குப் பக்கம் படங்கள் பல கொண்டு, பரவசத்தால் உங்களைப் படமெடுத்தாடச் செய்யும் புத்தாண்டுப் பேரிதழ் !

## 'முரசொலி' பொங்கல் மலர்

## போற்றிப் பாதுகாக்க வேண்டிய பைந்தமிழ்ப் பூங்காவனம் !

## படித்து மகிழவேண்டிய பகுத்தறிவுக் காவியம் !

# விலை இரண்டே ரூபாய்தான் !

★ புதுப்புது படங்கள் !

★ மனம் மயக்கும் பலப்பல பகுதிகள் !

★ பார்த்த மாத்திரத்திலேயே உங்கள் இதயங் கவரும் விதத்தில்; ஈடும் இணையுமில்லாத தமைன்யில் தயாராகிறது !

★ இன்றே உங்கள் பிரதியை விற்பனையாளரிடம் சென்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் !

★ இந்த ஆண்டின் இணையற்ற இலக்கியப் படைப்பினைப் பெற்று மகிழ்ந்திடத் தவருதீர்கள் !


*ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணநிதி, 'முரசொலி' அச்சகம், 4–128, மவுண்ரோடு சென்னை-6, தமிழ்நாடு*